முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 10—7—59 | வெள்ளி | ஒலி: 12

கேரளத்தில் காங்கிரஸ் ஜனநாயக வேடம் கலைகிறது!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

48. மொகலாய சாம்ராஜ்யத்தின் சரிவு

அன்புள்ள மாதவி,

அக்பரின் கொள்கைகளும் வழிமுறைகளும் அவருடைய சந்ததியினராலும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் மொகலாய ஸாம்ராஜ்யம் இந்தியத் துணைக் கண்டத்தின் வட பகுதியில் ஒரு தேசிய இனம் உருவாகத் துணை புரிந்திருக்கும். ஆனால் அவருடைய வழி வந்தோர் அவர் செய்த சாதனைகளையெல்லாம் ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே அழித்து மொகலாய சாம்ராஜ்யத்தின் சீரழிவுக்கும் வழிகோலினார்.

அக்பருடைய மூத்த மகன் சலீம்; அக்பருடைய ராஜபுத்ர மனைவியான ஜோதிபாய்க்குப் பிறந்த குழந்தைதான் அவன்! கலப்புத் திருமணத்தின் விளைவாகப் பிறந்த குழந்தையை அக்பர் பாதுஷா மொகலாயச் சிம்மாதனத்தின் வாரிசாக ஏற்றுக் கொண்டிருந்தார் என்ற உண்மை சிந்திக்கத் தக்கது.

அக்பரின் மரணத்துக்குப்பின் ஜகாங்கீர் என்ற பெயருடன் சலீம் பாதுஷாவாக முடிசூட்டிக் கொண்டான். தந்தையைப் போலவே மத விஷயங்களில் மைந்தனும் தாராள மனப்பான்மையுடன் இருந்தான். ஆனால் நாட்டு நிர்வாகத்தில் கொண்டிருந்த நாட்டத்தைவிட சிலை வடிப்பதிலும் சித்திரம் தீட்டுவதிலும், இசை பயில்வதிலும், எழிலாருடன் இன்பம் அனுபவிப்பதிலும் அதிக கவனம் செலுத்தினான் ஜகாங்கீர். நந்தவனங்களை ஏற்படுத்தி, அதில் மலர்ந்து மணம் பரப்பும் பூக்களில் மனத்தைப் பறிகொடுத்து அவன் போக்கிய பொழுது மிக அதிகம். ரசனையுன்றுமல் வாழ்க்கையை வாழ்ந்தவன் ஜகாங்கீர். கலைக் காட்சி ஒன்றை ஏற்படுத்தி அதை பத்திரமாகப் பாதுகாத்து வந்தான். ஒவ்வொரு ஆண்டும் பருவ எழிலோடு பூத்துக் குலுங்கும் இயற்கைப் பெண்ணின் இன்பத்தை அனுபவிக்க ஜகாங்கீர் காஷ்மீர் செல்லுவது வழக்கம். காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகரில் உள்ள ஹாலிமார் தோட்டமும், நிஷாத்பாக்கும் ஜகாங்கீர் உண்டாக்கியவைகளே!

ஜகாங்கீர் மணந்து கொண்டவள் பெண்ணினத்தின் பேரழகி நூர்ஜஹான். காவலனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தக் கட்டழகி, நாட்டு நிர்வாகத்தின் சூத்திரக் கயிற்றையே தன் கையில்தான் வைத்திருந்தாள். கவலையற்று வாழ்ந்து போக போக்கியங்களிலே புரள விரும்பிய ஜகாங்கீர், நாட்டுப் பொறுப்பின் சுமையை, புத்திசாலிப் பெண்ணான நூர்ஜஹான் ஏற்றுக் கொண்டதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், வாழ்க்கையின்பத்தை அணுவணுவாகச் சுவைத்து அனுபவித்தான். ஏராளமான செல்வமும் எல்லையற்ற அதிகாரங்களும் மொகலாய மன்னனுக்கு அப்பொழுது இருந்தது.

ஜகாங்கீரின் ஆட்சிக் காலத்தில் மொகலாய சாம்ராஜ்யத்தின் சரிவு ஆரம்பமாகாவிட்டாலும், அழிவுக்கு வித்தூன்றப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது நூர்ஜஹானின்—சர்வாதிகாரப் போக்கும் சுயநலமும் அரண்மனையில் குழப்பங்களையும் சச்சரவுகளையும் ஏற்படுத்தி மொகலாய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தைப் பலஹீனப்படுத்தியது. 1608-லும் 1915-லும் இங்கிலாந்து நாட்டின் மன்னன் முதலாம் ஜேம்சிடமிருந்து தூதர்கள் வந்து, ஜகாங்கீரைச் சந்தித்து, வியாபார உரிமை கோரினர். சர். தாமஸ்ரோ என்ற ஆங்கிலத் தூதரை ஜகாங்கிர் ஆஜ்மீரில் சந்தித்தான். ஆனால் அந்தத் தூது வெற்றியடையவில்லை. வியாபார உரிமைகளை ஆங்கிலேயருக்கு அளிக்க ஜகாங்கீர் மறுத்து விட்டான்.

ஜகாங்கீருக்குப் பிறகு சுமார் முப்பது ஆண்டுகள் அவனுடைய மைந்தனான ஷாஜஹான் மொகலாய சாம்ராஜ்யத்தை ஆண்டான். ஷாஜஹான் இந்தியாவை ஆண்ட பொழுது, பிரான்சில் பதினான்காம் லூயியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஷாஜஹானுடைய ஆட்சிக் காலத்தில்தான் மொகலாய சாம்ராஜ்யம் செல்வச் செருக்கின் சிகரத்தை எட்டிப் பிடித்திருந்தது. ஒரு ஆட்சியில் செல்வச் செருக்கு தலை தூக்கினால் அது சீரழிவின் ஆரம்பம் என்பதை நீ வரலாற்றிலே பார்க்கலாம்.

உயர்ந்த பளிங்கு மாளிகைகள் பல டெல்லியிலே கட்டப்பட்டன. மன்னன் வீற்றிருப்பதற்காக விலையுயர்ந்த மணிகள் பொறுத்தப்பட்ட மயிலாசனமும் அந்தக் காலத்தில்தான் செய்யப்பட்டது. இந்த மயிலாசனம் இப்பொழுது லண்டன் கண்காட்சி சாலையில் இருக்கிறதென்று எண்ணுகிறேன். தனது மனைவி மும்தாஜின் மரண ஆசையை நிறைவேற்ற யமுனையாற்றங் கரையில், காதலையும் சோகத்தையும் கல்லுருவாக்கிக் கலைக் கோயிலாம் தாஜ்மகாலைக் கட்டி முடித்தான் ஷாஜஹான். நிலவு வெள்ளத்தில் காவியம் பேசும் அந்தக் கட்டிடம் உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது நீ அறிந்ததே! மனைவி மும்தாஜுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப கஜானாவைக் காலிசெய்து கொண்டிருந்தபோது, தக்காணத்திலும் குஜராத்திலும் பயங்கரப் பஞ்சம் கோரத் தாண்டவம் புரிந்து கொண்டிருந்தது. தாஜ்மஹால் அல்லாமல் முத்து மசூதி, ஜும்மா மசூதி போன்ற சிறந்த கலைவளம் நிரம்பிய கட்டிடங்களும் ஷாஜஹானால் கட்டப்பட்டன.

ஷாஜஹானின் ஆட்சியில் ஊழல்கள் மலிந்தன. மதுக் கோப்பைகள் அரசியலை நிர்ணயித்தன. மங்கையரின் அதரங்கள் உதிர்த்த சொற்கள் சட்டங்களாக அமுல் நடத்தப்பட்டன. கலைக் கோபுரங்கள் வான முகட்டை எட்டின; ஏழையின் கண்ணீர் பூமியை நனைத்தது.

பாதுஷாவும், அவருடைய பிரபுக்களும் பஞ்சணையில் பாவையருடன் கொஞ்சிப் புரண்டனர். வறுமையில் வாடிய மக்கள் ஒரு வேளை உணவுகூடக் கிடைக்காமல் தெருக்களில் புழுவாய்த் துடித்தனர். மாளிகைகளில் வளம் கொழித்தது; மண் குடிசைகளில் வறுமை பேய்ச் சிரிப்புச் சிரித்தது. உடலின் ஒரு பகுதி வளர்ந்து மற்ற உறுப்புக்கள் சூம்பிப்போனால் என்னாகும்? செல்வர்க்கும் வறியவர்க்கும் இடையிலே உள்ள பிளவு அதிகமானால், விளைவு? பிரான்சில் மக்கள் புரட்சியாக வெடித்துக் கிளம்பியது. மொகலாய சாம்ராஜ்யத்தில், ஆட்சியின் ஆணிவேரைத் தாக்கி பலஹீனப் படுத்தியது!

ஊழல் மிக்க ஆட்சியின் விளைவை ஷாஜஹான் தனது வாழ்நாளிலேயே பார்த்து அனுபவிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவன் இறக்கும் முன்பே அவனுடைய மைந்தர்கள் அரியணைக்காகப் போட்டியிட ஆரம்பித்தனர். ஆட்சிப் போதையும் அதிகார வெறியும் அவர்களை ஆட்டிப் படைத்தன. போட்டி வளர்ந்தது; படைகள் கட்டுப்பாடு குலைந்தன. நாடு குழப்பத்தில் ஆழ்ந்தது. இந்தப் பதவிப் போராட்டத்தில் வெற்றி பெற்றவன், ஷாஜஹானின் மூன்றாவது மைந்தனான ஔரங்கசீப்!

ஔரங்கசீப்பின் ஆட்சி அரை நூற்றாண்டு நடந்தது. எத்தனையோ வகைகளில் இதர மொகலாய மன்னர்களிடமிருந்து ஔரங்கசீப் மிகவும் வேறுபட்டவர். வரலாற்று ஆசிரியர்களிடையே அவரைப் பற்றி நிறையக் கருத்து வேறுபாடுகள் உண்டு. பலம் பொருந்திய மன்னர் அவர். சிறந்த பண்பாடுகள் பல அவரிடம் இருந்தன. இருந்தும் அவரால் சீரழிந்த மொகலாய சாம்ராஜ்யத்தைச் செப்பனிட்டு நிலைபெறச் செய்யமுடியவில்லை. அவருடைய செயல்கள் மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவைத் துரிதப்படுத்தின.

அக்பர் கட்டினார்; ஔரங்கசீப் அழித்தார், மொகலாய சாம்ராஜ்யத்தை!

மொகலாய சாம்ராஜ்ய முன்னுரை பாபரால் எழுதப்பட்டது; முடிவுரை ஔரங்கசீப்பால் எழுதப்பட்டது.

ஔரங்கசீப் எப்படிப்பட்ட மனிதர்; அவரைப்பற்றி பொதுவாக நிலவிடும் கருத்து சரிதானா? அடுத்த கடிதத்தில் ஆராய்வோம்.

அன்புள்ள,

அகத்தியன்.

சர்க்காரிலும் ஏழைகளைச் 'சுடு'கிறார்கள்!



இது 'செய்தி—ஒலிபரப்பு இலாக்கா'வின் பணி ... .இது 'போலீஸ் இலாக்கா'வின் பணி!

வெள்ளி 10—7—59 சென்னை

பண்டிதரின் நாடகம்!

தாலி அறுக்கும் பெண் குலத்தின் தொகை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போகிறது — கேரளத் தாயின் செழிப்பான பூமியைச் செந்நிறமாக்கும் முயற்சிகள் சோகத் தொடர்கதையாகி விட்டன — கல்விக்குச் சமாதி கட்டிக் களத்தினிலே குதித்துவிட்ட மாணவர்கள், இன்னும் திரும்பி வரவில்லை — நாளுக்கு ஆயிரமாக முப்பதாயிரம் பேர் அடைபட்டு விட்டார்கள் சிறைகளிலே!

—இப்படிக் கேரளத்தில் வீசுகின்ற பிண வாடையைக் காற்றிலே கலந்து வேகமாகப் பரப்புகிறார்கள், அங்கு கிளர்ச்சியிலே ஈடுபட்டவர்கள். ஆனால், இத்தகைய கொடிய நிலைமை அங்கு அரும்புவதற்கு அடிக்கல் அமைத்துக் கொடுத்த காங்கிரசாரோ—வகுப்புவாதிகளின் கரங்களை வலுக்கட்டாயமாகப் பிடித்திழுத்து 'கம்யூனிஸ்டுகளின் கரு வறுக்கப் புறப்படுவீர்' என்று போர் முகாம் அமைத்த 'தோற்ற கட்சியின'ரோ — தங்களது தப்புக் கணக்காலும்; எடுத்துக்கொண்ட தகாத நடவடிக்கையாலுமே சவக் குழிகள் தோண்டப்படுகின்றன என்பதை உணரவில்லை.

பண்டித நேரு பவனி வந்தார், சுடுகாடுபோல் சோபிதமிழந்து காணும் கேரளத்தின் தெருக்களிலே! அங்கே விழுந்த பிணங்கள் யாருடையவை? அறுந்த அங்கங்கள் எந்த நாட்டுக்காரனுடையவை? பங்கப்பட்டு பரிதவிக்கும் பரம்பரையினர் எங்கிருந்து வந்தவர்கள்?

'ஏக இந்திய'ப் பிணைப்பைத் தூக்கத்திலும் பிதற்றுகின்ற பண்டிதர், இந்த வினாக்களுக்கு நேரிய விடைபெறவில்லை என்றே தெரிகிறது! சொந்த நாட்டிலே பிறந்தவன்தான் இந்த அவலத்திற்கு ஆளாகிறான் என்பதைக் கணமேனும் சிந்தித்திருந்தால் அவர் செய்திருக்க வேண்டியதே வேறு!

"நாம் காக்கும் ஜனநாயகத்தை நாமே அழிக்கலாமா? உங்கள் நேரடி நடவடிக்கையின் வேரிலேயே அநீதி தெரிகிறதே! ஆகவே அகிம்சாப் பித்தர்களே! கிளர்ச்சியை நிறுத்தி விடுவீர்!" —இப்படி ஆணையிடுவார் என்று நாடு எதிர்பார்த்தது!

இவ்விதம் ஆணையிடவில்லை; அறிவுரையும் கூறவில்லை; அந்தோ அவமானமே; ஒரு ஆலோசனைகூட வழங்கவில்லை!

"அத்தகைய நிலைமையை புத்திமதிகூறும் சாதாரண முறைகளினால் சமாளிக்க முடியாது. ஆகவே தேர்தல் நடத்தும்படி கேரள சர்க்காருக்கு யோசனை கூறினேன்....

"அங்கே ஜனநாயகத்தின் உண்மை சொரூபம் மறைந்து வருகிறது. இப்படி ஜனநாயகத் தத்துவம் சுக்கு நூறாகும் போது கெடுபிடியான ஜனநாயகம் பற்றிப் பேசுவதில் அர்த்தம் இல்லை!"

—என்று 7—7—59 அன்று செய்தி நிருபர்களிடம் பண்டிதர் தன் அகத்தைத் திறந்து காட்டியிருக்கிறார்.

ஆமாம்; நாடகத்தில் தன் வேடத்தை ஒழுங்காக நடித்துவிட்டார், அவர்! பின்னால் பக்க மேளமும் சுருதி கெடாமல் வாசிக்கப் பட்டு விட்டது!

"கேரளத்திலே இன்று தோன்றிவிட்ட அராஜகத்தைத் தடுக்க கம்யூனிஸ்ட் சர்க்கார் பதவியைத் துறக்க வேண்டும்; உடனே மறு தேர்தலை அங்கு நடத்த வேண்டும்; இதைத் தவிர வேறு வழியே இல்லை! கம்யூனிஸ்ட் சர்க்காரை மக்கள் முழுதாக வெறுக்கத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு இது சாட்சி!"

—காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு இப்படி அறிவித்துவிட்டது. அதோடு மட்டுமல்ல; இது கூட்டுச்சதி; முன்னேற்பாட்டுடன் பாடப்பட்ட துரோகக் கவி என்பதையும் நிரூபித்துக் காட்டிவிட்டது!

இல்லாவிட்டால், இந்தத் 'தூய்மையான' பார்லிமெண்டரி போர்டு இதுநாள்வரை எங்கே போயிருந்தது? பிடிக்காத அரசை நோக்கிப் புரட்சிகள் கேரளத்தில் மட்டுமேதானா தோன்றின?

"பஞ்சாப் படுகொலையை வெள்ளையன் நடத்தினான்; அவன் தந்து விட்டுப்போன துப்பாக்கிகளைத் துருப்பிடிக்க விடலாமா? ஆகவே விரல்விட்டு எண்ணிக் கொள்ளுங்கள் உடனே!" என்று மட மடவென்று இருபத்து மூன்று பிணங்களைக் குவித்தனர் சேலம் சிறையில்! நீதிக்குப் புறம்பான இந்தச் செயலால் பீதியடைந்த மக்கள் கண்டனக் குரல் எழுப்பினர், சென்னையிலே அன்றிருந்த குமாரசாமி ராஜாவின் ஆட்சிக்கு எதிராக! அப்போது எங்கே போயிருந்தது இந்த பார்லிமெண்டரி போர்டு? மக்கள் விரும்பாத அரசை விலகச் சொல்ல அந்த நாவுக்கு ஏன் துணிவில்லை?

இருமொழி மாநிலமாம் பம்பாயை வெவ்வேறாக்கு—என்கிற சம்யுக்த மகாராஷ்டிர சமிதியினரும், மகா குஜராத் பரிஷத்தினரும் நடத்திய போராட்டங்களை நாடு மறக்கவில்லை; அப்போதெல்லாம் துப்பாக்கி பிடித்த தறைத்தனம், சுட்டு வீழ்த்திய பிணங்கள் மறுபிறப்பும் எடுத்து விடவில்லை! இன்றுவரை ஓயாத அந்த எதிர்ப்புக்குச் சிக்கிய அரசை எடுத்தெறிந்திட வேண்டும்—என்று யோசனையைத் தெரிவிக்கவில்லையே; அந்த பார்லிமெண்டரி போர்டு!

நாகமலைக் காடுகளில் திரிந்து கொண்டிருந்த தனிநாடு விரும்பிகளை— நாட்டினர் செய்த கொடுமைகள் கொஞ்சமா? வெஞ்சினத்தோடு வீறிட்டெழுந்து 'எங்கள் விடுதலை' எங்கே? என்று கேட்டவர்களின் உடற்கூட்டிலிருந்து உயிருக்கல்லவா விடுதலை கொடுத்தனர்! அப்படிச் சாய்ந்த இரண்டாயிரம் சவங்களுக்கு வக்காலத்து வாங்காத பார்லிமெண்டரி போர்டு, இன்று மட்டும் ஜனநாயக முகமூடி தரித்து ஓடி வருகிறதே; ஏன்?

பார்லிமெண்டரி போர்டின் முடிவு குறித்து காங்கிரஸ் பொதுக் காரியதரிசி சத்திய நாராயண ராஜு இப்படிக் குறிப்பிடுகிறார்:

"கேரளாவிற்கு ஒரு கொள்கையும், மற்றவைகளுக்கு ஒரு கொள்கையும் காங்கிரசிலில்லை! கேரள நிலைமை எந்த மாநிலத்தில் எழுந்தாலும், அதே மாதிரி கொள்கைதான் கடைபிடிக்கப்படும்!"

—'கேரள நிலைமை' என்று அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்றுதான் புரியவில்லை! ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி என்றால் 'மறு தேர்தல்' கோரிக்கைதான் கட்டாயமாக்கப்படும் என்கிறாரா? இல்லை என எள்ளத்தனை சந்தேகமும் இல்லாது முடிவைக் கூறலாம். ஏனென்றால் மற்ற மாநிலங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் எல்லாம் போலீசாலும் ராணுவத்தாலும் அடக்கப்பட்டு விட்டன!

ஆகவே, அவர் குறிப்பிடுகிற 'கேரள நிலைமை' என்பதுதான் என்ன? மாற்றுக் கட்சியினர் எந்த மாநிலத்தில் அரசேற்றாலும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்; பதவியைப் பறிகொடுத்துவிடும் ஏமாளிகள் நாங்கள் அல்ல; அங்கும் 'கேரளா'க்களை உண்டாக்கிக் காட்டுவோம் — இப்படித்தான் அவர் மறைமுகமாகக் கூறுகிறார்!

ஆகவே, கேரளத்தில் வாக்களித்த மக்கள் இன்று ஏமாற்றப்பட்டு விட்டார்கள்! அவர்களுடைய வாக்குச் சீட்டுகள் வஞ்சகத்தீயிலே கொளுத்தப்பட்டு விட்டன! அந்தோ பரிதாபமே! இதுதான் பாரதம் பாருக்களிக்கும் புதிய ஜனநாயக இலக்கணமா? ஃ



சென்ற 28—6—59 அன்று, குளித்தலைத் தொகுதி, பணிக்கம்பட்டியில் திரு. வி. க. உயர்நிலைத் துவக்கப் பள்ளியை தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தபோது எடுத்த படம். படத்தில் மு. க., 'மக்களாட்சி' ஆசிரியர் இளமுருகுபொற்செல்வி, பள்ளி நிர்வாகி தோழர் பி. போலமன், குளித்தலை முத்து கிருஷ்ணன்—ஆகியோரைக் காணலாம்.

தாய்த் தென்னகம் — ஒரு ★ ★ பேய்ச்சுரைக்காய்த் தோட்டமா?

பஞ்சாலையின் சங்கே நீ ஊதாயோ—என்று மேலை நாடுகளில் பாட்டொலி கேட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—

அம்பர் ராட்டையைக் கை மாற்றிச் சுற்றிச் சுற்றி, நரம்பிலும், சதையிலும், எலும்பிலும் ஏற்படும் மரண வலி பொறுக்காது முணகிடும் ஒலியைத்தான் நம் நாட்டுப்புறங்களிலே கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த இழிநிலை போதாதென்று, இன்னொரு 'ஏகாதிபத்திய முத்திரை'யையும் அம்பர் ராட்டையைத் தந்த தமிழ் நாட்டவர் ஒருவரின் நெற்றியிலே குத்தியிருக்கிறது, டில்லி அரசு!

அம்பர் ராட்டை உருப்படும் திட்டமா? உதவாக்கரையா? விழலுக்கிறைத்த நீரா? — என்பது ஒருபுறமிருக்க, அம்பர் ராட்டையைத் தந்த தமிழர்—திரு. ஏகாம்பரநாதன் நெஞ்சிலே பாய்ந்திருக்கிற 'தோல்வித் தோட்டா' தமிழகத்து நெஞ்சிலே பாய்ந்திருப்பதாகத்தான் நாம் கருதவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

ஆம்; அம்பர் ராட்டை வரலாறு பற்றி இந்திய அரசினர் வெளியிட்ட செய்திப் படம் ஒன்றில் அந்த ராட்டையைக் கண்டுபிடித்த திரு. ஏகாம்பரநாதனைப் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லையாம்!

ஏன் கூறப்படவில்லை?

கண்டுபிடித்தவருக்குரிய மதிப்பும், புகழும் டில்லியிலிருந்து ஏன் தரப்படவில்லை?

—இந்தக் கேள்விக் கணைகளை தெளிவு பெற நினைக்கும் எண்ணத்தோடு நாம் தொடுத்தால், நம்மைப் போல் பேதை நெஞ்சத்தவர்கள் உலகில் யாருமே இருக்க முடியாது!

காரணம், நமக்குத் தெரியும். டில்லி மூலவர்கள் அடிமை மண்ணிலே பிறந்தவர்களுக்கு எந்தப் புகழாரத்தையும் சுயநல எண்ணமில்லாமல் சூட்டமாட்டார்கள்!

தி[illegible]. தலைமை வகிக்கும் பண்பும் தங்களுக்கே உரிய 'வரப்பிரசாதங்கள்' என்று எண்ணி இறுமாந்து கிடப்பவர்கள் அவர்கள்!

எனவே அவர்களிடமிருந்து ஏகாம்பரநாதனுக்கு புகழ்மாலை வராது; நியாயமான விளம்பரம் நேர்மையான முறையில் கிடைக்காது!

ஏனெனில், அம்பர் ராட்டையைக் கண்டுபிடித்த இவர் தமிழகம் எனும் அடிமை நாட்டிலே பிறந்தவர்!

வாழ்வுக்கும், நல் வசதிக்கும் வடக்கு நோக்கித் தவம் கிடக்கும் திராவிட தீபகற்பத்திலே பிறந்தவர்!

இந்தச் சோகக்கதை முன்னொரு தடவையும் நடந்திருக்கிறது. 'சுதந்திர யாத்திரை'—எனும் இந்தியத் துணைக் கண்டத்து விடுதலைப் போராட்டத்தைப்பற்றிய செய்திப் படத்தில் தமிழகம் ஏற்ற பங்கு மறைக்கப்பட்டது; தென்னகம் ஏற்ற தியாகத் தழும்புகள் இருட்டடிப்பு செய்யப்பட்டன! தென்னாட்டவர் சிந்திய ரத்தம் இருட்டோடு இருட்டாகக் கழுவிவிடப்பட்டது!

தென்னாட்டவர் என்றாலே ஏதோ அடிமைச் சிற்றுயிர்கள்—புழு—பூச்சிகள் என்ற நினைப்புத்தான் அவர்களை இம்மாதிரி திமிரோடு நடக்கச் செய்கிறது; சரித்திர முடிவுகளைத் தெரியாது அழிவுச் சரிவை நோக்கி ஓடச் செய்கிறது!

'இந்த ஏகாதிபத்தியத் திமிர் எண்ணத்தால்தான், ஏகாம்பரநாதரே! — உமக்குரிய இடம் கிடைக்கவில்லை!' — என்று கூறி, அவருக்கு நாம் உண்மையை உணர்த்த முற்படலாம்!

'அடிமை நாட்டில் பிறந்த காரணத்தால் ஆளவந்தார்கள் உம்மை கௌரவிக்கவில்லை.' என்று கூறி ஏகாம்பரநாதனுக்கு இருக்கின்ற நிலையைப் படம் பிடித்துக் காட்டலாம்!

ஆனால், ஆச்சரியத்திலும் ஆச்சரியம்; ஏகாம்பரநாதன் 'வடக்கின் வஞ்சகங்களை' உணராதவரல்ல! இதை அவர் கொஞ்ச காலத்திற்குமுன் இரகசியமாக வெளியிட்டதாகக் கூறப்படும் ஒரு புத்தகம் விளக்குகிறது!

அந்தப் புத்தகத்தில் அம்பர் ராட்டையின் பிறப்பிலிருந்து, அது வடவர்களால் ஜீரணித்துக் கொள்ளப்பட்டது உட்பட எல்லாவற்றையும் விளக்கமாக எழுதியுள்ளார்!

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த இவரை, ஏதோ 'பொது மக்கள் கைங்கரியம்' மட்டுமே அம்பர் ராட்டை கண்டுபிடிப்பில் ஈடுபடுத்தியது என்று கூற முடியாது.

காந்தியார் அறிவித்த லட்ச ரூபாய் பரிசுத் திட்டம்தான் இவரை வெகுவேகமாக அந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்திற்று.

அந்தப் புத்தகத்தில் கூறியபடி வீட்டை விற்று, காட்டை விற்று அந்த ஆராய்ச்சியைத் துவங்கினார்; வெற்றி கண்டார்.

வெற்றியின் பலனான அந்த ராட்டையைத் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் அலைந்தார்; காந்திய ஸ்தாபனங்கள் அவரை அப்படி அலைக்கழித்தன!

இதற்குள் காந்தியாரும் இறந்துவிடவே, தீர்ப்பு கூறப்படவில்லை; என்றாலும் அம்பர் ராட்டையை அந்தக் 'காந்திய ஸ்தாபனம்' ஏற்றுக் கொண்டது.

"அம்பர் ராட்டை ஒரு மில்லிலுள்ள 'ஸ்பின்னிங்' எனும் பகுதியின் 'மாடல்'தான். ஆகவே 'மில்'லுக்கு எதிரிகளான நாம், எப்படி இதை ஏற்றுக்கொள்ள முடியும்? ஏ. காந்திய பக்தர்களே! தக்ளிப் பிரியர்களே! அம்பர் ராட்டை நம் விரோதி! அதை இயக்க வருபவன் என் விரோதி! அதை இயக்க வேண்டுமானால் என் பிணத்தின்மீது நடந்து வந்துதான் இயக்க வேண்டும்!" —என்று ஒரு 'தீவிர' கதர் பக்தர் கூவினாராம், அப்போது!

பலமான எதிர்ப்புக்கிடையே அம்பர் ராட்டை ஏற்றுக்கொள்ளப்பட்டது; என்றாலும் தென்னாட்டுக்காரன் ஒருவன் புகழ் பெறுவதா—என்ற 'பொறாமை எண்ணம்' முள்ளென அவர்கள் இதயத்திலே குத்திக் கொண்டிருந்தது.

சதித் திட்டத்தினாலோ, என்னவோ அம்பர் ராட்டையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் அதைக் கண்டுபிடித்தவர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டார்.

இப்போது 'அம்பர் சர்க்கா இயந்திர நிபுணர்' என்று பாராட்டப்படும் ஒரு வடநாட்டுக்காரர் அம்பர் ராட்டையைக் கவனித்து ஏதோ எழுதும் மேதையைப் போலவும்—அம்பர் ராட்டையின் உண்மையான 'கண்டுபிடிப்பாளர்' கீழே உட்கார்ந்து நூற்பவர் போலவும் நிழற்படம் எடுக்கப்பட்டதாம்! அது பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதாம்!

—இப்படி 'கண்டுபிடித்தவரைச்' சுற்றிக் காரிருள் எழுப்பி, அவர் உயர்கிற போதெல்லாம் தலையில் தட்டி அமர வைத்துக் கொண்டு வந்திருக்கின்றன, இக்காந்திய ஸ்தாபனமும், மத்திய அரசும்!

இதைக் கண்டு பொறுக்க மாட்டாத ஏகாம்பரநாதனின் உள்ளம் கொதித்தது; ஒரு லட்சம் ரூபாய் பரிசு கிடைக்கும் என்று எண்ணிய அவர் இதயம், படிப்படியான வஞ்சகச் செயல்களைக் கண்டு கொல்லன் உலையெனக் கொதித்தது.

அதன் பயனே, தான் வஞ்சிக்கப்பட்டதைப் பற்றி ஏகாம்பரநாதன் வெளியிட்ட புத்தகம்!

'இந்த ராட்டையை ஏகாம்பரநாதன் கண்டுபிடித்தார்—என்று சில இடங்களிலும் ஏனடா சொன்னோம்? ஆரம்பத்திலேயே 'அமுக்கி' இருந்தால் இந்தத் தொந்தரவு இருக்காதே! இப்போது நம் வஞ்சகத்தை விளக்கிப் புத்தகத்தையல்லவா வெளியிட்டுவிட்டான்?' — என்று எண்ணியதாலோ என்னவோ, பத்மஸ்ரீ பட்டத்தை வெகு வேகமாகத் தந்தார்கள், அதைக் கொண்டாவது அவருடைய உள்ளம் அமைதியடையுமாவென எண்ணி!

ஆனால், இந்த நிகழ்ச்சி மூலம் வடநாடு நமக்குத் தருகின்ற பாடம், நாம் அவர்களின் 'அடிமைகளாய்' இருக்கிறவரை, நம் தோட்டத்திலே பூத்த பூ முல்லைப் பூவாய் இருந்தாலும் முருங்கைப் பூவாய் இருந்தாலும் எல்லாம் அவர்களுக்குக் கள்ளிப் பூ தான்!

நம் தோட்டத்தில் காய்த்த காய் பலாக்காயாய் இருந்தாலும் கலாக்காயாய் இருந்தாலும் எல்லாம் டில்லிக்காரர்களுக்குப் பேய்ச் சுரைக்காய்தான்!

—திருப்பூர் அடியார்



புதிதாகத் திறக்கப்பட்ட பணிக்கம்பட்டி (குளித்தலைத் தொகுதி) திரு. வி. க. துவக்க உயர்நிலைப் பள்ளியின் தோற்றம் இது.

பார்! பார்! கேரளம் பார்!

2

மாறன் எம்.ஏ.

"அவசியம் ஏற்பட்டால் கேரளத்தை ஜனதிபதியின் ஆட்சிக்குக்கீழ் கொண்டு வருவோம்."

—பண்டித நேரு இப்படி மறைமுகமாக அறிவித்திருக்கிருர்.

ஒரு மாநிலத்தை மத்திய அரசாங்கம் தனது நேரடியான ஆட்சிக்கு! எப்போது கொண்டு வர முடியும்? அரசியல் சட்டத்தின் 355-வது பிரிவு திட்டவட்டமாகக் கூறுகிறது:

"ஒரு மாநிலத்தை வெளி ஆக்ரமிப்பிலிருந்தும்; உட் குழப்பத்திலிருந்தும் காப்பாற்றுவதும், அரசியல் அமைப்பு சட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலமும் இயங்குகிறதா—என்று பார்ப்பதும் யூனியன் அரசாங்கத்தின் கடமையாகும்."

—தாங்கள் ஏதோ நேர்மைப் பாதையில் நடப்பதாக நாட்டவரை நம்ப வைக்கும் காங்கிரஸ்காரர்கள் இப்போது அரசியல் சட்டத்தின் இந்தப் பிரிவைத்தான் காட்டி; கேரளத்துக் கம்யூனிஸ்ட் அரசாங்கம் உடனடியாக ராஜினாமா செய்துவிட வேண்டும்—என்று கூக்குரல் போடுகிருர்கள்.

அவர்கள் கூற்றுப்படி அங்கே அரசாங்கம் செவ்வனே தனது பணிகளைச் செய்ய முடியாதபடி உட் குழப்பங்கள் அதிகரித்து விட்டனவாம்.

அப்படி இந்தக் குழப்பம் ஏற்படுவதற்கு யார் காரணம்? வகுப்புவாதக்கும்பலோடு கூட்டு சேர்ந்து காங்கிரஸ்தானே இந்தக் குழப்பத்திற்கு ஆணிவேராக நிற்கிறது?

கேரளத்துக் காங்கிரஸ் குழப்பத்தை ஏற்படுத்துமாம்; டெல்லிக் காங்கிரஸ் அதன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளுமாம்!

ஆமாம்; வலது கையால் குழந்தையைக் கிள்ளுவார்களாம்; இடது கையால் தட்டித் தூங்க வைப்பார்களாம்!

இன்று பண்டிதர் பேசும் ஜனநாயகம் இந்தத் துடுக்குத்தனத்தைத்தான் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

உட் குழப்பம் ஏற்பட்டுவிட்டது; அதனுல் கம்யூனிஸ்ட் கட்சி வெளியேற வேண்டும் — என்கிருர்கள்.

உள்நாட்டுக் குழப்பம் இந்திய உபகண்டத்துச் சரித்திரத்தில் இப்போதுதான் முதன் முறையாகக் கேரளத்தில் நடைபெறுகிறதா? இல்லை.

* முன்பு பம்பாய் மாநிலத்திலே சம்யுக்த மராட்டியம் வேண்டுமென்று மாபெரும் கிளர்ச்சி நடைபெற்றதே; அந்த உட் குழப்பம் காரணமாக மொரார்ஜி தேசாய் உண்ணுவிரதம் இருந்தாரே தவிர; சகமந்திரிகளோடு பதவியை ராஜினாமாச் செய்தாரா?

* பஞ்சாப் மாநிலத்திலே கெய்ரான் மந்திரி சபை விதித்த தீர்வையை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி நடைபெற்றதே; அப்போது அந்த அமைச்சரவை கூண்டோடு பதவியைக் காலி செய்ததா?

* வங்கத்தில் அரசாங்கத்தை எதிர்த்து மாதமொரு கிளர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் இருக்கிறதே; அங்கே இதுவரை எத்தனை ராஜினாமாக்கள் நடைபெற்றிருக்கின்றன?

* அவ்வளவு ஏன்? முன்பு ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எதிர்த்து நம் மாநிலமே ஒன்று திரண்டு போராட்டத்தில் இறங்கி; தமிழகமே போர்க்களமாக மாறியபோது; காங்கிரஸ் சார்பாகக் கொல்லைப் புறமாக நுழைந்து கொலுவீற்றிருந்த ஆச்சாரியார் ஆட்சி, பதவியை உதறியெறிந்துவிட்டு, புதுத் தேர்தலுக்குப் பிரகடனம் செய்ததா?

இல்லை, இல்லை, இல்லை! அப்படி இருக்க, இப்போது கேரளத்துக் கம்யூனிஸ்ட் மந்திரி சபை ஏன் ராஜினாமா செய்து புதுத் தேர்தல் நடத்தவேண்டும்?

பண்டித நேரு கேரளம் சென்ருர்; நிலைமையைப் பரிசீலனை செய்தார்; மறு தேர்தல் நடத்துவது ஒன்றுதான் மருந்து—என்று உபதேசித்து விட்டுத் திரும்பிவிட்டார்.

மறு தேர்தல் நடத்தும்படி யோசனை கூறுவதற்கு நேரு யார்? காங்கிரஸ் கட்சியை ஆட்டிப் படைக்கும் தலைவர் என்கிற முறையில் பாரபட்சமற்ற முறையில் தீர்ப்புக் கூறும் தகுதி அவருக்கு இருக்கிறது—என்று யார் நற்சாட்சி கூறமுடியும்?

—சிந்திக்கத் தெரிந்தோர் அனைவரின் நெஞ்சிலும் இந்தக் கேள்வி அலைகள் மோதிக்கொண்டிருக்கின்றன.

கேரளத்துக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சட்டப்படி ஆளும் தகுதி இருந்தபோதிலும் அதற்கு இந்த நேரம் பொதுமக்கள் ஆதரவு இல்லை என்று கூறுகிருர்கள்.

அவ்வப்போது நடக்கும் தேர்தல்கள் ஒவ்வொன்றும்தான் சம்பந்தப்பட்ட ஆட்சிக்கு பொதுமக்கள் ஆதரவு இருக்கிறதா இல்லையா — என்று கண்டுபிடிப்பதற்குரிய அளவுகோலாகும்.

* தேவிகுளம் உபதேர்தலிலே கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் தான் வெற்றி யடைந்திருக்கிருர்!

* மூவட்டுப்புழா நகர மன்றத்தில் எல்லா வார்டுகளுக்கும் நடைபெற்ற தேர்தலிலே கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது!

* அட்டிங்கல் தொகுதியிலே முன்பு பிரஜா சோஷலிஸ்டுகளுக்குச் சொந்தமான இடம், இப்போது கம்யூனிஸ்ட்டுகளுக்குச் சொந்தமாகி இருக்கிறது!

* அது தவிர: திருவனந்தபுரம் மாவட்டத்திலே சமீபத்தில் நடந்தேறிய பஞ்சாயத்துத் தேர்தலிலே மொத்தம் 26 இடங்களில் கம்யூனிஸ்ட்களுக்கு 14 இடங்களும், அவர்களது ஆதரவுபெற்ற சுயேட்சைகளுக்கு 5 இடங்களும் கிடைத்திருக்கின்றன.

—இப்போதுதான் மக்கள் மன்றம் கம்யூனிஸ்ட்டுகளையும், அதன் எதிர்ப்பாளர்களையும்

[தொடர்ச்சி பக்கம்—12]

பணிக்கம்பட்டி, திரு. வி. க. துவக்க உயர்நிலைப் பள்ளி திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படம் இது. இதில், விழாவுக்குத் தலைமை வகித்த கல்வி கண் காணிப்பாளர் திரு. இராமச்சந்திரன் பி. ஏ. பி. டி., திறந்துவைத்த தோழர் மு. க., பள்ளி நிர்வாகி போலமன், தோழர்கள் இளமுருகு பொற்செல்வி, ஜி. பராங்குசம், குளித்தலை முத்துகிருஷ்ணன், தோழியர் பொற்செல்வி இளமுருகு, மற்றும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள் — ஆகியோரைக் காணலாம்.

முன் இதழ்களில் :

முக்கடல்களின்மீதும் தமிழன் கலம் ஓட்டிய காலம்!...

நண்பர்களான பாண்டியன் பெருவழுதியும் கரிகால் சோழரும் சந்திக்கிறார்கள், காவிரிப் பூம் பட்டினத்திலே! ஊர்வலம் வருகிறது. ஊர்வலத்திலே கரிகாலனின் உயிருக்கு உலை வைக்க சதி நடப்பதைக்கண்ட பாண்டிய வீரன் செழியன், சதிகாரனைக் கொல்கிறான்.

புலவர் காரிக்கண்ணனார் வீட்டுக் கருகில் இப்போர் நடந்த காரணத்தால், புலவரின் மகள் முத்துநகை செழியனுக்குப் பணிவிடை செய்யும் பேறு பெறுகிறாள்.

ஆனால் அங்கு திடீரென்று தோன்றிய அடியார் கூட்டம், மயக்க மருந்து தந்து செழியனைத் தூக்கிச்சென்றுவிடுகிறார்கள்.

மயக்கம் தெளிந்த முத்துநகை, அரசர் கரிகாலருக்கு எதிராக ஒரு மாபெரும் சதி சோழ மண்டிலத்திலே நடைபெறுகிறதென்பதையும், அச்சதிக் கூட்டத்தின் தலைவன் கரிகாலனிடம் தோற்றோடிப்போன 'இருங்கோவேள் மன்னன்' என்பதையும் அறிகிறாள்!

அச்சமயத்தில் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வருகிற யவன நாட்டுக் கிழவர் வருகிறார்; அவருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருக்கிறார் புலவர்; பின்னர் யவனக் கிழவர் விடைபெற்றுப்போகிறார். அப்போது வாயிற்படியருகில் யவனக் கிழவரின் பதக்கம் ஒன்று கிடைக்கிறது, முத்துநகைக்கு! அதில் 'இருங்கோவேள்' எனப் பொறிக்கப்பட்டிருப்பது கண்டு திடுக்கிடுகிறாள். தன் தந்தையும் சதியில் பங்கெடுத்திருக்கிறாரோ—என்ற சந்தேகம் பிறக்கிறது.

ஓடுகிறாள், கரிகாலனிடம்! நாட்டில் நடக்கும் சதியைக் கூறுகிறாள். செழியனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பைத் தான் ஏற்பதாகக் கூறுகிறாள்!

அரசனின் ஆதரவுடன், ஆண் உடை பூண்டு செழியனைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டாள் முத்துநகை. அச் சதிகாரர்களால் கொண்டு செல்லப்பட்ட செழியனோ இருங்கோவேள் மன்னனின் காட்டு மாளிகையில்—'சாவூருக்குப் போகும் வழி'—எனும் சிறையில் கிடந்து வாடுகிறான்!

ஆண் உடையிலுள்ள முத்து நகை மன்னர்கள் ஒளிந்து வாழும் காட்டோரத்தில், அருவிக் கரையில், ஒரு பெண்ணைச் சந்திக்கிறாள். தாமரை எனும் அந்தப் பெண் உண்மையாக நடிக்கும் முத்துநகையைக் கண்டு காதலிக்கிறாள்!

'நடுக்காட்டில் நிலவுமுக மங்கையா?' எனும் கேள்வி எழுப்பிய சந்தேகத்தால் தாமரையைத் தொடர்ந்து செல்கிறாள் முத்துநகை. ஆனால் ....நடு வழியில் எதிர்பாராத விதமாக யவனக் கிழவர் பார்த்து விடவே, அவரிடமிருந்து தப்ப நினைத்த முத்து நகை அடியார்கள் கூட்டத்தில் சிக்கிவிடுகிறாள். தான் ஒரு பெண் என்பதை சூழ்நிலை காட்டிக் கொடுத்துவிடவே, அடியார்களின் தலைவர் முத்துநகையின் கையைப் பற்றி இழுக்கிறார். ஆனால், அந்தக் காமவெறியனிடமிருந்து முத்துநகையைக் காப்பாற்றுகிறார், அங்கு வந்த யவனக் கிழவர்! இருவரும் போராடிக் கொண்டிருக்கும் போது, நழுவி ஓடிவிடுகிறாள் முத்துநகை! யவனக் கிழவர் தான் இருங்கோவேள் என்று அவள் முடிவு செய்கிறாள்.

வீடுவந்த அவள், யவனக் கிழவரும் தன் தந்தையும் பேசிக்கொண்டிருப்பதைக் காண்கிறாள். உடனே அரண்மனை சென்று, பல இடையூறுகளுக்கிடையில் ஐம்பது வீரர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வீடு திரும்புகிறாள்!

ஆனால் வீடு பூட்டிக் கிடந்தது! 'தாமதித்து விட்டோம்; தப்பி விட்டான் துரோகி!'—என்று பொருள்படும் ஓலையையும், வீரர்களையும் அரண்மனை அனுப்பிவிட்டு, மறுபடியும் தன் பயணத்தைத் துவக்கினாள் முத்துநகை!......

இனி மேலே படியுங்கள்....

★ ★ ★

உயிருக்கு விலை

8

பாண்டியன் பெருவழுதி தலைநகருக்குத் திரும்ப வேண்டுமென்ற கருத்தை சோழ மன்னனுக்குத் தெரிவித்ததையொட்டி சோழன், பாண்டியனின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான். செழியன் காணாமற் போனதைத் தவிர வேறு எந்தக் குறையும் தனக்கில்லையென்று பாண்டியன் சோழனிடம் மனம் விட்டுப் பேசினான்.

செழியனைப்பற்றியும் சோழ மண்டிலத்தைக் கவிழ்க்க நடைபெறும் சூழ்ச்சித் திட்டங்களைப் பற்றியும் தகவல் அறிந்து வர பொறுப்பு வாய்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், செழியனைப்பற்றி எந்தக் கவலையும் வேண்டாமென்றும் கரிகாலன் பெருவழுதிக்கு ஆறுதல் கூறினான். பின்னர் பாண்டிய நாடு—சோழ பூமி இரண்டின் உறவு முறைகள் பற்றியும் நட்பு உடன்பாடுகள் பற்றியும் நீண்ட நேரம் பேசினர். தங்களின் ஒற்றுமைக்கும் இரு நாடுகளின் நட்புக்கும் வழிகோலிய புலவர் காரிக்கண்ணனார் பற்றி இருவரும் புகழ்ந்துரைத்தனர்.

"காரிக்கண்ணனாருக்கு ஒரு மகளிருக்கிறாள். அவள் பெயர் முத்து நகை. அவளுடைய திருமணத்தை இந்த நாட்டு இளவரசியின் திருமணம்போல அவ்வளவு சிறப்பாகச் செய்து முடிக்கப் போகிறேன்." என்றான் கரிகாலன்.

"அப்படியா? மிகவும் மகிழ்ச்சி. ஆனால் ஒன்று! அந்தத் திருமண ஏற்பாட்டை என்னைக் கலக்காமல் துவங்கி விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்." என்றான் பெருவழுதி.

கரிகாலனும் சிரித்தபடியே "அதற்கென்ன; ஆகட்டும்!" எனப் பதில் கூறினான்.

அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே வாயிற்புறத்தில் பாண்டிய நாட்டு வீரர்கள் ஊர் திரும்பும் உற்சாகத்தில் அணிவகுக்க ஆரம்பித்து விட்டார்கள். பெருவழுதிப் பாண்டியன் ஏறிச் செல்வதற்கு சோழ பெருமானது தேர் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. நண்பர்களிடம் விடைபெற்று பாண்டியன் தேரில் ஏறிக் கொண்டான். பாண்டியனின் படை வீரர்கள் கரிகாற் சோழனை வாழ்த்தி வணங்கி விட்டுத் தங்கள் தலைநகரம் நோக்கி நடைபோட்டனர்.

பெருவழுதி அமர்ந்திருந்த அழகிய தேரும் நகர ஆரம்பித்தது. பாண்டியனும் அவன் நாட்டு வீரர்களும் தானைத் தலைவர்களும் போவதை கரிகாற் சோழன் பரிவு உணர்ச்சியோடு நின்று பார்த்துக் கொண்டிருந்தான். பாண்டியன் குழுவினரும் பரிவாரங்களும் நீண்ட தூரம் சென்று கண்ணுக்கு மறைந்த பிறகே கரிகாலன் திரும்பினான். திரும்பியவன் திகைத்திடும் வண்ணம் ஒரு வீரன் மிக வேகமாகக் குதிரையில் வந்து கரிகாலனை வணங்கி நின்றான்.

"யார் நீ?" என்று கரிகாலன் கேட்பதற்குள், அந்த வீரன் தன் கையிலிருந்த ஓலைச் சுருளை எடுத்து நீட்டினான். அரசன் அதை ஆவலுடன் வாங்கிப் படித்தான்.

"சோழ மன்னர் கரிகாலருக்கு வரைவது யாதெனில்—பாண்டிய வீரன் செழியன் என்னிடம் தான் அடிமைப் பட்டுக் கிடக்கிறான். அவனை உயிரோடு பாண்டியனிடம் நீர் ஒப்படைக்க வேண்டுமானால், என்னுடைய நாட்டை என்னிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் செழியனை சித்ரவதை செய்து அணு அணுவாகக் கொல்ல உத்தேசம். உடன் பதில் செயல் மூலம்!

— இருங்கோவேள் மன்னன்.'

கடிதத்தைப் படித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தான் கரிகாலன். கடிதம் கொண்டு வந்தவனைக் காணவில்லை. அவன் சிட்டாய்ப் பறந்து விட்டான். கரிகாலனின் கண்கள் சிவந்தன. பற்களை நற நறவென்று கடித்துக் கொண்டான். உறையில்கிடந்த வாளின் பிடியைக் கரம் இறுகப் பிடித்தது. சிங்கம்போல் தன் மாளிகைக்கு நடந்து வந்தான். "எங்கே சேனைத் தலைவர்கள்?" என உறுமினான். ஒரு நொடியில் சேனைத் தலைவர்கள் வந்து குழுமிவிட்டனர்.

"சோழ நாட்டைச் சுற்றியுள்ள எல்லாப் பகுதிகளிலும் - ஏன்; சோழ நாட்டுக்குள்ளும் நமது படைகளின் முரசம் ஒலிக்க வேண்டும். இந்த இருங்கோவேள் எங்கு இருந்தாலும் அவனை உடனடியாகச் சிறை பிடித்துக்கொண்டு வர வேண்டும்!' என முழங்கினான், சோழர் திலகம்.

சேனைத் தலைவர்களும் அந்த அவசர உத்திரவுக்கு அடிபணிந்து தங்கள் வீர வாட்களை எடுத்து அரசனுக்கு வணக்கம் தெரிவித்தனர். அப்போது வெகு வேகமாகப் புலவர் காரிக் கண்ணனர் அங்கு வந்து சேர்ந்தார்.

"பொறுத்திடுக,மன்ன.பொறுத்திடுக! அமைதி! அமைதி!!" எனக் கையுயர்த்தி எதிரே வந்து நின்ற புலவரை நோக்கி, கரிகாலன்" புலவரே! என்ன சொல்கிறீர்கள்?" எனப் பதறிக் கேட்டான்.

"இருங்கோவேளைப் பிடிப்பதும் கொல்வதும் நமக்குப் பெரிதல்லவே—செழியனை உயிரோடு மீட்பதல்லவா நமது குறிக்கோள்!" என்றார் புலவர்.

"இதோ, அந்த இருங்கோவேளின் பயமுறுத்தல் ஓலையைப் படியுங்கள். இதுவரையில் கரிகாலனை யாரும் மிரட்டியதில்லை. என்னிடம் தோற்றோடி ஒளிந்து கொண்ட இந்தக் கோழை மிரட்டுகிறான். இவனுக்கு நான் அஞ்சிச் சாவதா? முடியாது! முடியாது! சோழ நாட்டு வீரம் சோரம் போய்விடவில்லை. நம் நாட்டு வீரர்கள் வாள் பிடித்துப் பழகியவர்களே தவிர, பகைவரின் தாள் பிடித்தல்ல! புலிக் கொடியின் நிழலிலே போர்க் குரல் கொடுத்த பரம்பரை விழுப்புண் பெற்றுப் பெருமை கொள்ளுமே தவிர, எதிரியின் காலில் விழுந்தல்ல! கரிகாலனை யாரும் தடுக்க வேண்டாம். ஓரிரு நாட்களில் அந்த உன்மத்தன் இருங்கோவேளின் தலை என் முன்னே தாழ்ந்திடல் வேண்டும். அதுவரை எனக்கு வேறு நினைவேயில்லை."

—எனக் கர்ச்சனை செய்து கிளம்பினன் கரிகாலன்.

புலவர், புன்னகை புரிந்தவாறு அவனை அணுகி, "சோழப் பெருவேந்தே! பெருவழுதிப் பாண்டியருக்கு அளித்துள்ள வாக்குறுதி என்ன? எப்படியும் செழியனை மீட்டுக் கொடுப்பதாகத்தானே—அதை மறந்துவிடலாமா? தங்களுக்கு இருங்கோவேள் எழுதியது போலவே பாண்டிய மன்னருக்கும் ஒரு மடல் அவன் எழுதவில்லையென்று தாங்கள் எண்ணுகிறீர்களா? பெருவழுதிக்கும் இப்படியொரு கடிதம் வந்திருக்கிறது!"

"அப்படியா?'—கரிகாலனுக்கு ஒரே வியப்பு.

"ஆமாம்; பெருவழுதிப் பாண்டியன் திடீரெனத் தலைநகருக்குப் புறப்பட்டதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?"

"என்ன காரணம் புலவரே?"

"இருங்கோவேள் அவருக்கும் எழுதியிருக்கிறான். அதாவது, பாண்டியநாடு சோழநாடு—இரண்டின் நட்புரிமைக்குக் குந்தகம் 'உண்டாக்குவதற்காகவே இந்த ஏற்பாடு!"

"எப்படி, புலவரே?"

"இது புரியவில்லையா? பறித்துக் கொண்ட நாடுகளைக் கொடுத்தால் செழியனைத் திரும்பத் தருவேன்; இல்லையேல் செழியனைக் கொன்றுவிடுவேன்—என்பது இருங்கோவேளின் எச்சரிக்கை!"

"ஆமாம்!"

"நாடுகளைத் திரும்பக் கொடுத்துச் செழியனை ஏன் மீட்டுத் தரக்கூடாது என்று பாண்டியன் நினைக்கக்கூடும். தாங்கள் அப்படிச் செய்யாவிட்டால் பாண்டியருக்குத் தங்கள்மீது பகை ஏற்படக்கூடும். அந்தப் பகையை மூட்டிவிட்டுத் தன் சூழ்ச்சியை வெற்றிபெறச் செய்யலாம் என்பது இருங்கோவேளின் நினைவாக இருக்கும். இந்தச் சங்கடமான நிலையைச் சமாளிக்க முடியாமல் தான் பாண்டிய மன்னர் உடனடியாகத் தலைநகருக்குப் புறப்பட்டு விட்டார்!"

"சரி.........அப்படியானல் இப்போது என்ன செய்யலாம்?"

"சூழ்ச்சியை சூழ்ச்சியினுல்தான் முறியடிக்க வேண்டும்!"

"இருங்கோவேள் நிபந்தனைப்படி அவனது நாடுகளைத் திரும்பக் கொடுத்துவிடுவதா?"

"நான் அவ்வாறு கூறவில்லை மன்ன! படை வீரர்களைப் பல திசைகளிலும் அனுப்பி அவனுக்குக் கோபத்தை மூட்டினுல் திடீரென்று அவன் செழியனைக் கொன்று விடவுங் கூடும்!"

"அப்படியானல், இதுபற்றிப் பாண்டிய மன்னரின் யோசனையைக் கேட்கலாமா?"

"அவருக்கே எதுவும் புரியாமல்தானே தங்களுக்குத் தொந்திரவு கொடுக்கக் கூடாதென்று புறப்பட்டு விட்டார்!"

"புலவர் அவர்களே! இந்த ஓலை நமது நாட்டின் வீரத்துக்கு விடப்பட்ட அறைகூவல்! இதை நான் ஏற்றுக்கொண்டே தீர வேண்டும். இருங்கோவேளுக்கு நாடும் திரும்பக் கிடையாது! செழியனையும் அவன் கொல்ல முடியாது!" எனக் கொக்கரித்தான் கரிகாலன்.

அப்போது வீரன் வடிவில் முத்துநகை அவன் மாளிகைக்குள் நுழைந்தாள். கரிகாலன் அவளை அடையாளம் தெரியாமல் வியப்புற்று விழித்தான். அருகேயிருந்த மெய்காப்பாளன் கரிகாலனின் காதில், "வருவது முத்துநகைதான்!" என்று ரகசியமாகச் சொல்லவே கரிகாலன், புலவரை ஒருமுறை பார்த்துவிட்டு எச்சரிக்கையாக இருந்து கொண்டான். புலவருக்கு, எதிரே வருவது தன் மகள் என்று அடையாளம் புரியவில்லை.

முத்துநகை, கரிகாலனிடம் ரகசியமாகப் பேசவேண்டும் என முகக் குறிப்பு காட்டவே, அவன் புலவரையும் மற்றவர்களையும் பார்த்து 'சரி; நான் ஒற்றனிடம் பேச வேண்டியிருக்கிறது. எல்லோரும் போகலாம். தேவையானல் மீண்டும் அழைக்கிறேன்." எனக் கூறிவிட்டுப் புலவர் பின்னுல் ஏழடி தூரம் நடந்து சென்று அவரையும் வழியனுப்பிவிட்டு, முத்துநகையுடன் மாளிகையின் உட்புறம் சென்ருன். தன் தந்தைக்கு எதிரே தெரியாதவளைப் போல நடந்து கொண்டோமே யென்று முத்துநகை நினைக்கிருள் என்பதை அவளது கலங்கிய கண்கள் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

கரிகாலன், அவளைப் பார்த்து, "நீ மிகவும் திறமைசாலிதான்! அடையாளமே தெரியவில்லையே!" என்று வியந்து பாராட்டினன்.

"முதலில் என்னைப் பற்றி சந்தேகப்பட்டீர்களே; பார்த்தீர்களா? உங்களையே ஒருக்கணம் திகைக்க வைத்து விட்டேன்!" என்ருள் முத்துநகை சிரித்துக் கொண்டே!

"எல்லாம் சரி; ஆனுல் குரல் உன்னைப் புரிய வைத்து விடுகிறதே!" என்ருன் அரசன்.

"அதற்காகத்தான் ஊமை நாடகம் ஆடுகிறேனே—மௌன நோன்பு அனுஷ்டிப்பதாகக் கூறிவிட்டு. எல்லாம் பேச்சு வார்த்தைகளையும் எழுத்தாணியாலேயே பூர்த்தி செய்கிறேன்!"

"போகட்டும்! உன் முயற்சிகள் எந்த அளவுக்கு வெற்றியளித்திருக்கின்றன? ஏதாவது என்னிடம் கூறமுடியுமா?"

முத்துநகை சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள்.

"பயப்படாதே. இங்கு யாருமே இல்லை. தைரியமாகச் சொல்!"

"இருங்கோவேளின் இருப்பிடத்தை அநேகமாகத் தெரிந்து கொண்டு வந்துவிட்டேன்!"

"எப்படி? எப்படி?"

"இந்த வேடத்தால் விசித்திரம் ஒன்று நடந்துவிட்டது. முதல் நாள் காடுமேடெல்லாம் அலைந்து ஒரு அருவிக் கரையில் தங்கினேன். அப்போது ஒரு பெண் வந்தாள். வந்தவள் என் மீது காதல் கொண்டாள்!"

"என்ன? காதல் கொண்டாளா? அவள் யார் பைத்தியக்காரி?"

"அவள் பெயர் தாமரை!..."

"தாமரை; அழகான பெயர் தான்!"

"அந்தத் தாமரை மலர்ந்த தடாகம் எது என்பது எனக்கு முதல் நாள் தெரியாமல் போய் விட்டது. அதற்குள் அவள் பிரிந்து விட்டாள். அவள் விருப்பப்படி மறுநாளும் அங்கு சென்றேன்!"

"ஓகோ! அவளும் வந்தாளாக்கும்!"

"வராமல் இருப்பாளா? வந்தாள்! தன்னந்தனியாக அந்தப் பொன்னவிர் மேனியாள் வந்தாள். நான் ஒரு லட்சியத்திற்காகப் பேசாத நோன்பு இருப்பதாக முதல் நாளே சொல்லி விட்டேனே; அதைப் பின்பற்றி மறுநாளும் என்னுடைய ஊமை நாடகத்தை ஆரம்பித்தேன். என்னைக் கண்டது முதல் அவள் இதயத்தைப் பறிகொடுத்து ஏங்கித் தவிப்பதாகக் கூறி அழுதாள்!"

"உம் — வழக்கமான காதல் துவக்கவிழா! பிறகு?"

"பிறகென்ன?.... நானே விடுவிக்க முடியாத சிக்கலில் அகப்பட்டுக் கொண்டேன். அவளது காதல் தாகத்தைப் பார்த்தபோது, 'அம்மா! நானும் உன்னைப்போல ஒரு பெண்தான்' என்று கூறிவிடலாமா என்று யோசித்தேன். அய்யோ பாவம்; அவள் இருதயம் வெடித்துவிடுமே என்று பயந்து எதுவுங் கூருமல் இருந்துவிட்டேன்!"

"அதிருக்கட்டும் — அவள் யாராம்?"

"அதுதானே மிக முக்கியம். அதைத் தெரிந்து கொண்ட பிறகு தானே அவளை நானும் காதலிப்பதாக உறுதி செய்து கொடுத்திருக்கிறேன்!"

"அப்படியென்ருல்?"

"அரசர் பெருமானே! அவள் நமது பகைவனின் தங்கை! ஆமாம் — இருங்கோவேளின் கூடப் பிறந்தவள்!"

"ஆ! அப்படியா?"

"எப்படியோ நான் பகைவனின் இருப்பிடத்துக்குள் நுழைய வழியேற்பட்டுவிட்டது. நாளை தினம் அவள் என்னை மீண்டும் சந்திப்பதாகக் கூறிப் பிரிந்திருக்கிருள். தன் அண்ணனிடம் ஏதாவது பொய் சொல்லி தந்திரம் செய்து என்னை அவள் கூடவே அழைத்துப் போவதாகக் கூறியிருக்கிருள்!"

"இருங்கோவேளின் தங்கையும் அவனைப்போல சூழ்ச்சிக்காரியாக இருந்து உன்னை ஏமாற்றி விட்டால் என்ன செய்வது முத்துநகை?"

"பயமே தேவையில்லை—நான் அவர்கள் எல்லோரையும்



சென்ற 28-6-59 அன்று குளித்தலைத் தொகுதியிலுள்ள மருதூர் ஊராட்சி மன்ற வெள்ளி விழா, தோழர் மு. கருணாநிதி தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், தலைமை வகித்த மு. க., தோழர்கள் டி. வி. சன்னாசி எம். எல். ஏ., ஊராட்சி மன்றத் தலைவர் ராமசாமி, ம. கந்தசாமி பி. ஏ., குளித்தலை முத்துகிருஷ்ணன், மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் முதலியோரைக் காணலாம்.

ஏமாற்றிவிட்டு வெற்றிபெறுவேன். சோழத் திருநாட்டின் மேன்மைக்குக் குழி தோண்ட முயற்சிப்பவன் யாராயிருந்தாலும் அவனை என் உயிரைப் பணயமாக வைத்து அழிக்க முற்படுவேன். இந்த உறுதி என்னைக் காப்பாற்றும்!"

"முத்துநகை! இருங்கோவேள் எழுதியுள்ள மிரட்டல் கடிதத்தைப்பார்!" என்று சோழன், ஓலையை அவளிடம் கொடுத்தான். அதை அவள் படித்துப் பார்த்துவிட்டு திரும்ப அரசரிடமே அதைக் கொடுத்தாள்.

"தந்திரத்தைத் தந்திரத்தால் தான் வெல்ல வேண்டும். படைகொண்டு மோதினால் செழியனை உயிரோடு பெறுவது கஷ்டமாகி விடக்கூடும். எதற்கும் நான் அடுத்த முறை வந்து தங்களைச் சந்திக்கும் வரையில் பொறுத்திருங்கள்." என்று கூறிவிட்டு அரசரிடம் விடைபெற்று முத்துநகை தன் குதிரையில் புறப்பட்டாள்.

அவளுக்கு வேலையெல்லாம் அந்தக் காட்டுபுறத்திலேதான். காட்டின் ஓரத்திலேயே நெடுந்தூரம் சென்று குதிரையை விட்டு இறங்கி நாலாதிசையிலும் விழிகளைச் செலுத்தினாள். ஒரு பாழடைந்த மண்டபமும், அதனருகே அழகிய குளமொன்றும் இருக்கக் கண்டாள். குளிக்கலாம்போல் தோன்றியது. குளிப்பதற்கு அதுதான் பாதுகாப்பான இடம் என்று தெரிந்து கொண்டாள். குதிரையை மறைவான இடத்தில் கட்டிவிட்டு, ஆண் உடைகளை அவிழ்த்துக் கரைமீது வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கினாள். அந்தக் குளிர்ந்த நீர் அவள் ஆயாசத்தையும், ஏன்; மன எரிச்சலையுங் கூடப் போக்கிற்று. கரையேறவே மனமின்றி நீந்தி விளையாடினாள். இன்னும் எத்தனை நாளைக்கு பெண்மையின் பொலிவை ஆணுடைக்குள் மறைத்துத் திரிய வேண்டுமோ என்ற கவலையோடு நீருக்குள்ளே மூழ்கியிருக்கும் தன் மேனியின் அழகைத் தானே பார்த்து ரசித்துக் கொண்டாள். தன்னைப்போய் ஒருத்தி காதலிக்கிறாளே யென்று நினைத்தபோது அவளையறியாமல் சிரிப்பு வந்து விட்டது. வாய் விட்டுச் சிரித்து விட்டாள்.

அந்த இன்ப மயமான குளியலை அங்குள்ள புதர்களின் இடுக்கின் வழியாக இரு கண்கள் பார்த்துக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை. அநாயாசமாகக் குளித்துக் கொண்டிருந்தாள். அவள் குளித்த காட்சியைக் காண வெட்கி, அந்தக் கண்கள் மூடி மூடித் திறந்தன. பிறகு அந்தக் கண்கள் நகர்ந்தன. பின்னர் அந்த இடத்தை விட்டுக் கண்கள் மறைந்தன.

முத்துநகை நீண்ட நேரம் தண்ணீரில் கிடந்து ஊறிய பிறகு கரையேறினாள். எந்த விதமான பயமும் வெட்கமும் இல்லாமல் கரையில் நின்று உடைமாற்றிக் கொண்டாள். தன் எழிலுருவை—காண்பவரை மயக்க வைக்கும் மாம்பழ உடலை—நீரில் ஆடும் தன் பிரதிபிம்பத்தைத் தவிர வேறு யாரும் பார்க்கவில்லை யென்பது அவள் எண்ணம்.

ஆண் உடைகளைச் சரி பார்த்து அணிந்து கொண்ட பிறகு, கரையில் உள்ள மண்டபத்துக்கு வந்தாள். வந்தவள் திடுக்கிட்டாள். அங்கு ஒரு முரட்டு மனிதன், இரண்டொரு செங்கற்களை அடுக்கிய அடுப்பில் ஒரு பானையை வைத்து சமையல் செய்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள். அவன் தன்னையும், தான் குளித்த அலங்கோலத்தையும் பார்த்திருப்பானோ? பார்த்திருக்க மாட்டான் என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டாள்.

அவன் வேறு பக்கம் திரும்பி சமையல் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அவள் வந்த காலடி ஓசை கேட்ட பிறகுதான் அவன் மெதுவாகத் திரும்பினான். ஆகா; என்ன எடுப்பான முகம்! முறுக்கிவிடப்பட்ட பெரிய மீசைகள். தடந்தோள். கண்களிலே யாரையும் கவரக் கூடிய தனி ஒளி. கட்டான தேகம். இளைஞனுமல்ல; வயோதிகனுமல்ல; நடுத்தரமான வாலிபன் என்று கூறவும் முடியாது. வாலிபன் அல்ல என்றும் கூறிவிட முடியாது!

அவன். அவளைப் பார்த்ததும் பயந்தவனைப்போல எழுந்து பணிவாக நின்றான். அவளும் அவனை உட்காரச் சொல்லி சைகை செய்தாள்., அவன் உட்காராமல் நின்று கொண்டே அவள் முகத்தையே கவனித்தான். எங்கே தன் பெண்மை தெரிந்து விடுமோ என்ற பயத்தில் முத்துநகை, தன் முகத்தைத் தடவிப் பார்த்துக்கொள்வதும், கைகளால் மறைப்பதுமாக இருந்தாள்.

பிறகு அவன் அவளைப் பார்த்து, "நீங்க யாரு?" என்று கேட்டான்.

அவள் ஊமை ஜாடை காட்டினாள்.

அவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் புரிந்து கொள்ளத் துடித்தான்." எந்த ஊரு?" என்றான்.

அப்போதும் அவள் காட்டிய ஜாடை அவனுக்குப் புரியவில்லை.

"என்ன பேரு?" என்றான். கழுத்தில் கிடந்த முத்தை எடுத்துக் காட்டி, தன் பெயர் முத்து என்பதைப் புரிய வைத்தாள்.

"ஓகோ, முத்துவா உங்க பேரு?" எனக் கேட்டுவிட்டு, "ரொம்ப தூரம் பயணம் போல இருக்கு! உக்காருங்க.... நான் சமைக்கிற பொங்கலிலே கொஞ்சம் சாப்பிடலாம்!" என்று உபசரித்தான்.

முத்துநகை,வேண்டாமென்று தலையசைத்தாள். என்றாலும் பசியின் கொடுமை கொஞ்சம் சாப்பிடலாம்போல் இருந்தது. வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொண்டாள்.

"ஆங்! வயிறு கேக்குது! உக்காருங்க!" என்று அவளது வயிற்றை அந்த மனிதனும் உற்சாகத்தோடு தடவிக் கொடுத்து, கையைப் பிடித்து உட்கார வைத்தான்.

அடுப்பில் பானையில் உலை, கனவேகமாகப் பொங்கிக் கொண்டிருந்தது. ஒரு துண்டில் முடிந்து வைத்திருந்த முந்திரிப் பருப்புகளையும், வெல்லக் கட்டிகளையும் பானையில் கொட்டிக்கிண்டினான். பொங்கல் தயாராகிவிட்டது. பானையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு மண்டபத்தைவிட்டு இறங்கி ஓடி இரண்டு பெரிய பூவரசு இலைகளைப் பறித்து வந்தான். அதைக் குளத்தில் கழுவியெடுத்து அவள் கையில் ஒரு இலையைக் கொடுத்தான். பானையிலுள்ள பொங்கலை யெடுத்து அந்த இலையில் வைத்தான். தானும் ஒரு இலையில் பொங்கலை வைத்துக் கொண்டு அருந்தத் தொடங்கினான்.

அவனது உபசரிக்கும் தன்மையைக் கண்டு முத்துநகை உள்ளுக்குள் மகிழ்ந்தாள். ஏழை வீடாக இருந்தாலும் விருந்தினரை உபசரிப்பதில் தமிழ் நாட்டுக்கு ஈடு தமிழ்நாடுதான் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். அதை வெளியில் சொன்னால்தான் வேடம் வெளிப்பட்டுவிடுமே!

"ம்.... இன்னங் கொஞ்சம் சாப்பிடுங்கய்யா!" என்று அவன் இலையில் பொங்கலை வைத்தான்.

முத்துநகை "போதும்" என்று சைகை செய்தும் பயனில்லை.

"என்னை யாரென்று நீங்க கேக்கலியே—நான் ஒரு விறகு வெட்டி! பெயரு வீரன்! தாய் தந்தை யாருமே கிடையாது; அனாதை! நானே விறகு வெட்ட வேண்டியது — சுமக்க வேண்டியது—விற்க வேண்டியது—கஞ்சி காய்ச்சிக் குடிக்க வேண்டியது—அவ்வளவுதான் வாழ்க்கை! இதுதான் நம்ப வரலாறு!"

—எனக் கூறிவிட்டு அவன் மேலும் கொஞ்சம் பொங்கலை முத்துநகை இலையில் வைத்தான். அவள் வேண்டாமென்று தலையாட்டி இலையைக் கீழே வைத்தாள்.

"அட! சும்மா சாப்பிடுங்கய்யா! எவ்வளவு சுவையா இருக்கு! ம்...இந்தாங்க!" என்று கொஞ்சம் பொங்கலையெடுத்து அவள் வாயிலேயே திணித்துவிட்டான்.

முத்துநகைக்கு மெல்லவும் முடியவில்லை; விழுங்கவும் முடியவில்லை! பொங்கலையல்ல; தன்னைப் பற்றிய உண்மையை!

மிகக் கஷ்டப்பட்டு பொங்கலைத் தின்று முடித்துவிட்டுக் குளத்தில் இறங்கி கை கழுவிக் கொண்டாள். முத்துநகை கை கழுவும்போது இடுப்பில் செருகியிருந்த பதக்கம் கீழே விழுந்தது. உடனே அதை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டாள். அது தான் "இருங்கோவேள்" என்று எழுதப்பட்டு, யவனக்கிழவன் தவறிவிட்டுப்போன பதக்கம்!

அந்தப் பதக்கத்துக்குரிய இருங்கோவேள்தான் தனக்குப் பொங்கல் சமைத்துக் கொடுத்துப் பசியாற்றினான் — உபசரித்தான்—என்ற உண்மை அவளுக்குத் தெரியாது; பாவம்! கை கழுவிக் கொண்டு கரையேறிய அவளுக்கு விறகு வெட்டி வேடத்திலிருந்தஇருங்கோவேள் தாம்பூலங் கொடுத்தான். அதையும் வாங்கிப் போட்டுக் கொண்டாள்.

"அடேடே — அய்யாவுக்கு வாய் நல்லா செவக்குதே!" என்று அவளது செவ்விதழ்களைத் தன் முரட்டு விரல்களால் கிள்ளிவிட்டான், இருங்கோவேள். அது அவளுக்குப் பிடிக்கவில்லை யென்றாலும் அவன் விரல்களால் இதழ்களில் கிள்ளியதும் விறுவிறு என்று ஆரம்பித்த வலி உணர்ச்சி எப்படியோ போய் முடிந்தது; சமாளித்துக் கொண்டாள்.

கேரளத்தில்

ஜனநாயகத்தைக் கொலை செய்யும் காங்கிரசாரே!

வினை விதைத்து வினை அறுக்காதீர்!

என்றென்றும்

கேரளத்தை 'ரத்தக்களரி பூமியாக' மாற்றாதீர்!

சர்க்காரை மாற்ற

ஒரு கிளர்ச்சி என்ற புதிய நிலையை மற்ற மாநிலங்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்!

இன்று கேரளத்தில்!

நாளை? நாளை? உங்கள் கதி என்ன?

நாடு கேட்கப் போகிறது!

உலகம் கேட்கப் போகிறது!

உஷார்! உஷார்!

கலப்படம்

காட்சி—1.

"நமஸ்தே!"

"ஓ…நீங்க யாரு?"

"மை ரேடியோ இன்ஜினியர் ஹும்! ஓ…உங்களுக்கு இந்தி தெரியாதா?…நான ரேடியோ என்ஜினியர்! உங்கள் ரேடியோவை ரிப்பேர் பார்க்கலாமென்று வந்திருக்கிறேன்."

"வாங்க…வாங்க! எங்க ரேடியோ கூட கெட்டுக் கிடக்குது! 'கரகர'ன்னு சப்தம் வருது குறுக்கே! கொஞ்சம் ரிப்பேர் பாருங்க!"

ஒரு வீட்டில் இது நடைபெறுகிறது. வடநாட்டான் ஒருவனை உள்ளே அழைத்துச் செல்கிறார், அந்த வீட்டுக்காரர்.

அந்த வடவனின் விழிகள் இங்குமங்கும் சுழல்கின்றன!

"ஓ…பாயி! குச் பாணிலாவோ! கொஞ்சம் தண்ணீர்"—என்று கூறுகிறான். வீட்டுக்காரர் உள்ளே ஓடுகிறார். ரேடியோ இன்ஜினியராக வந்தவன் வீட்டிலுள்ள பொருட்களைச் சுருட்டி மூட்டை கட்டுகிறான். தயாராக இருந்த காரில் ஏறிக் கொண்டு மாயமாய் மறைகிறான். தண்ணீர் கொண்டு வந்த 'அப்பாவி' வீட்டுக்காரன் நடந்ததை அறிந்து குய்யோ முறையோ என்று ஒப்பாரி வைக்கிறான்.

ஒரு கூட்டம் அந்த வீட்டை நோக்கி வருகிறது! அதன் கைகளில் பூட்டு உடைக்கும் ஆயுதங்கள்!!

பூட்டை உடைக்கிறார்கள்!

'படா'ரெனக் கதவைத் திறந்து உள்ளே செல்கிறார்கள்!

பாத்திரம் பண்டம், நகைநட்டு அத்தனையும் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள்.

சைதாப்பேட்டை,
மயிலாப்பூர்,
சிந்தாதிரிப்பேட்டை,
தியாகராய நகர்

—ஆகிய சென்னை நகரத்துப் பகுதிகளில் புகுந்து கொள்ளையடித்திருக்கின்றனர்.

3 மாதத்தில் அந்த வடநாட்டுக் கொள்ளையர்கள் புகுந்து திருடிய வீடுகள் பதினொன்றும்! திருடப்பட்ட பொருள்களின் மதிப்பு….

20,000 ரூபாய்களாம்!

இத்தனைக்கும் அவர்கள் எத்தனை பேர் தெரியுமா? ஆறே பேர்! ஆறு வடவர்கள் மூன்று மாதத்தில் இருபதாயிரம் ரூபாய் திருடியிருக்கிறார்கள், சென்னை நகரில் மட்டும்!

நாடுவிட்டு நாடு வந்து வீடு புகுந்து கொள்ளையடிக்கும் துணிவு இவர்களுக்கு எப்படி வந்தது என்பதை நினைத்துப் பார்ப்பதற்கு முன், இங்கு திருடிய பொருட்களை விந்தியத்திற்கு அப்பால் கொண்டுபோய் வடநாட்டில்தான் விற்பது அவர்கள் வழக்கம் என்று கேள்விப்படும்போது நாம் ஆச்சரியத்தில் மூழ்கிறோம்!

நாட்டைக் கொள்ளையிடுகிறார்கள் வடவர்; அதோடு வீட்டையும் கொள்ளையிடுகிறார்கள்—என்பதை நிரூபிக்கும் இச்செய்திகள் நம் மனதிலே எதிர்காலத்தில் என்னென்ன ஆகுமோ என்று அச்சத்தை மூட்டுகிறது!

வீட்டிலே கொள்ளையடித்தோர் சிலர்; அவர்களை
விலங்கிட்டுப் பிடித்தது போலீஸ்! ஆனால்,
நாட்டையே வஞ்சிப்பவர் உண்டு;
நச்சுப் பாம்பினும் கொடியவர் கோடி-இந்தக்
கேட்டைக் களைந்திட வகையில்லையா; நம்
வாட்டம் போக்கிட வழியில்லையா?

சிறிது நேரம் கழித்து வீட்டுக்காரன் வீடு திரும்புகிறான். தான் திறக்காமலேயே திறந்து கொண்ட கதவைக் கண்டு ஆச்சரியம் அடைகிறான். அடுத்த கணத்திலேயே உள்ளத்தில் அச்சம் குடி புகுகிறது; காட்டுத்தீ பரவுகிறது. உள்ளே சென்று பார்க்கிறான். கள்ளர் புகுந்துவிட்டனர் என்ற சேதி அறிகிறான். பொருளை இழந்த அவன், புலம்பித் தவிக்கிறான்.

களவாட நினைப்போரே; கத்திரி தூக்க வேண்டாம்!

காட்சி—2.

பட்டப் பகல்!

பாதுகாப்பானது எனக் கருதப்படும் இடம்! அங்கு பூட்டிக் கிடக்கிறது ஒரு வீடு. அந்த வீட்டுக்காரர் இந்தவூர் போலீசை நம்பி—அரசாங்கத்தை நம்பி—ஆட்சியாளரின் 'ஆக்கினைச் சக்கரத்'தை நம்பி—செங்கோலை நம்பி வீட்டைப் பூட்டிவிட்டு எங்கோ போயிருக்கிறார்.

—இந்தக் காட்சிகள் சென்னையில்தான் நடைபெறுகின்றன; தமிழ் நாட்டின் தலைநகரில்தான் நடைபெறுகின்றன!

நடத்துகிறவர்கள் யார் தெரியுமா? தென்னகத்தில் புகுந்து கொள்ளையிடும் தொழிலைத்துணிவுடன் மேற்கொண்டிருப்பவர்கள் யார் தெரியுமா?

வடநாட்டுக்காரர்கள்!

ஆம்; வடவர்தான் வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கின்றனர், இங்கே!

அச்சத்தைத் தருகின்ற அதே நேரத்தில் இத்தகைய துணிவு கொண்ட அந்த வடவர்களின் நெஞ்சங்களையும் பார்க்கிறோம்!

எந்த ஆதாரத்தைக் கொண்டு அவர்கள் திருட நினைக்கிறார்கள்?

பட்டப் பகலில் வீட்டின் பூட்டை உடைக்கும் மனவலிமையை அவர்களுக்கு எது தருகிறது?

தென்னகம்—அடிமை பூமி! நமக்கு வடநாடு இடம் தராதபோது, கை நீட்டி வரவேற்க வேண்டிய காலனி நாடு! நம்மைத் தட்டிக் கேட்க முடியாத சந்தைக் கூடம்!

—என்னும் நினைப்புத்தான்!

திராவிடத் திரு நாட்டின் சொத்துக்களைத் திருடினால் கேட்பாரில்லை; அதை வடநாட்டில் கொண்டு போய் விற்கும் 'வியாபார'த்தைத் தடுப்பாரில்லை.

—என்னும் எண்ணம்தான்!

இவர்கள் நினைப்பிலே—எண்ணத்திலே தவறில்லை; காரணம், தென்னகம் அடிமை பூமி

[தொடர்ச்சி பக்கம்—10]

உறுப்பினர் சேர்த்தல்--புதுப்பித்தல்

தவணை நீடிப்பு

★

உறுப்பினர் சேர்த்தல்—புதுப்பித்தல் ஆகியவைகளுக்கான காலவரையறையை நீடிக்குமாறு மாவட்டச் செயலாளர்கள்—கிளைக் கழகச் செயலாளர்கள்—ஆகியோர் வேண்டிக் கொண்ட தன் பேரில் தலைமைக் கழகத்தின் 5-59-ஆம் எண் அறிக்கைப்படி இறுதி நாளாகக் குறிப்பிட்டிருந்த 30—6—59-ஆம் நாளிலிருந்து மேலும் ஒரு திங்களுக்கு—31—7—59-ஆம் நாள்வரை உறுப்பினர் சேர்த்தல்—புதுப்பித்தல் ஆகியவைகளுக்கான காலவரையறை நீடிக்கப்பட்டிருக்கிறது.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

சர்க்காரின் சோஷலிசம்

★

13—5—59 ல் நடந்த நிகழ்ச்சி

"கல்கத்தா மெயிலைப் பிடிக்க வேண்டுமாம்—கொஞ்சம் வேகமாக ஓட்டப்பா ரயிலை!" என்றார் 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிர'ஸின் 'கார்டு'!

"எப்படி சார், முடியும்? வழக்கப்படி இரண்டு மணி நேரம் 'லேட்'டாகப்போய்க் கொண்டிருக்கிறோம். மந்திரி வந்திருக்கிறார் என்று இதைவிட வேகமாக ஓட இந்த 'இரும்பு ரயிலுக்கு' 'நம்ம மூளையா' இருக்குது?"—என்று எரிந்து விழுந்தார் ரயில் டிரைவர்.

"அப்படி யென்றால் கல்கத்தா மெயிலை நாம் பிடிக்க முடியாதா?"

"ஏன் முடியாது? கல்கத்தா மெயிலை 'இட்ராஸி' ஸ்டேஷனிலேயே ஒரு ஒன்றரை மணி நேரம் போட்டு வைத்தால் நாம் பிடித்துவிடலாம்!"

"ஐயோ… ஒருத்தருக்காக நூற்றுக்கணக்கான மக்கள் நடுவழியில் கிடந்து தவிப்பதா?"

"எல்லாம் தெரிந்த நீங்களே இப்படி அலறலாமா? இந்த நாட்டிற்கு மந்திரி வேணுமா; மக்கள் வேணுமா? ரயில் கிடைக்காமே மந்திரி தவிக்கணுமா; மக்கள் தவிக்கணுமா?"-என்று 'விளாசினார்' டிரைவர்.

"மந்திரிதான் வேணும்; மந்திரிதான் வேணும்!"—கூறிக்கொண்டே ஓடினார், கார்டு, இட்ராஸி ஸ்டேஷனுக்குப் போன் செய்ய!

●●●

இட்ராஸி ஸ்டேஷன்!

கல்கத்தா மெயில் நின்று கொண்டிருக்கிறது!

'டில்லி மந்திரி வருகிற கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் வந்த பிறகுதான், இந்த ரயில் போகும்!'—என்று கேள்விப்பட்ட மக்கள் துடித்தார்கள்!

அந்தத் துடிப்பு ஐந்து நிமிடம், பத்து நிமிடமல்ல; ஒருமணி நேரம் இருந்தது!

தவியாய் தவித்துக் கிடந்தனர் மக்கள்!

தன்னைச் சுற்றிப் பட்டாளம் காவல் காக்க, அந்த ரயிலிலிருந்து இந்த ரயிலுக்கு வந்தார், டில்லி மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக், தூய கதருடையுடன்!

அவர் இதயம் ரயிலுக்காக ஏங்கித் தவிக்கக் கூடாது என்பதற்காக நூற்றுக்கணக்கான இதயங்கள் ஏங்கி ஏங்கி, துயரத்தால் விங்கும்படிச் செய்யப்பட்டது!

ஒரு காங்கிரஸ் மந்திரியின் சுக சவாரிக்கு, நூற்றுக் கணக்கான மக்களின் சுகம் பலி பீடமேற்றப் பட்டது!

வாழ்க காங்கிரஸ் ஆட்சி!

ONE NO: 26977

விடுதலை

VIDUTHALAI ESTD: 1935

திராவிடர் தமிழ்த் தினசரி

ஈரோட்டு 'வித்யாபீடத்தில்' காமராசருக்குப் பட்டங்கள்!

நாளொரு பட்டமும் பொழுதொரு புகழ்மாலையுமாக காமராசர்—பெரியார் உறவு வளர்கிறது. வளர்பிறையென அவர்கள் உறவு வளர்ந்து முற்றிவிட்டது. இப்போது அந்த 'உறவு' பக்தியாகி மாறியிருக்கிறது.

காமராசர் தினமும் 'பெரியார் ராமசாமி துதியமுது' பாராயணம் செய்கிறார்; பேசுகின்ற கூட்டங்களில் பெரியாரின் பொன்மொழிகளை எடுத்து எடுத்துத் தருகிறார்; பெரியார்—என்ற சொல்லை உச்சரித்த உடனேயே காமராசர் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்கிறது; அகராதியில் சொற்களைத் தேடிப்பிடித்து, உவமை நயம் சேர்த்து, புகழாரம் தொடுத்துப் பெரியார் கழுத்தில் போடுகிறார்! அவர் இந்த நாட்டை உய்விக்க வந்தவர் என மேடைஏறுகிற பக்கமெங்கும் பேசுகிறார்!

—என்றெல்லாம் நாம் நினைக்கலாம்!

தவறு; தவறு; அப்படி நினைப்பது பெருந் தவறு!

காமராசரின் புகழை இதன் மூலம் குறைத்ததாகப் பெரியார் நம்மீது பாய்ந்தாலும் பாயலாம்!

காரணம், 'காமராசர் பக்தி' மகிமையைப் பற்றி நமக்கென்ன தெரியும்? கொஞ்ச நாளைக்குமுன், பக்தியின் முதற்படியாக பெரியார் ஒரு பட்டம் தந்தார், காமராசருக்கு!

பச்சைத் தமிழர்!

(ஆம்; சென்னை ராஜ்யம் என்ற பெயரை, செந்தமிழ் வழங்கிய தமிழ் நாட்டிற்கு விடாப்பிடியாகச் சூட்டியிருக்கும் காமராசருக்குத்தான் அந்தப் பட்டம்!)

நாளாக ஆக 'காமராசர் பக்தி' பெருத்தது; பக்தி முற்றிய நிலை அடைந்தார் பெரியார்! ஸ்ரீலஸ்ரீ காமராசப் பெருமானின் மகிமையை—சாதிய சித்து விளையாடல்களை—துப்பாக்கி ஆயுதம் ஏந்தி நம்மை உய்விக்க வந்த தன்மையை உணர்ந்தார்! பெரியாரின் உள்ளம் பக்தி நிரம்பிய கவியுள்ளமாக மாறியது! கவிதா வெள்ளம் காமராசருக்கு ஒரு புதுப் பட்டம் சூட்டத் தூண்டியது! பட்டமும் சூட்டப்பட்டது! அது என்ன தெரியுமா?

"ரட்சகர் காமராசர்!"

[ஆச்சரியப்படாதீர்கள்! முதுகளத்தூர் படுகொலையை நினைக்காதீர்கள்! வால்பாறையில் கேட்ட துப்பாக்கி வேட்டுகளை மறந்து விடுங்கள்! சென்னையில் நடந்த 'அரசாங்கத்து அராஜகங்களை' மனத்திரையிலிருந்து அழித்துத் துடைத்து விடுங்கள்! பக்திப் பெருக்கெடுக்கும்போது அவலச் செய்திகளை—சோகச் சம்பவங்களை நினைப்பது பாவம்!]

இப்போதைய ப்க்தியின் பலன்...! ரட்சகர் காமராசர்' என்ற பட்டம்! இனி பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடும்போது காமராசருக்குக் கீழ்க் காணும் பட்டங்கள் பெரியாரால் கொடுக்கப்படலாம் என்று 'நம்பத் தகுந்த' வட்டாரங்கள் கள் கூறுகின்றன!

தெய்வீகர் காமராசர்!
காமராச சுவாமிகள்!!
காமராச ஆழ்வார்!!!
ஆச்சாரியசுவாமி காமராசர்!!!!

★

'ரட்சகர் காமராசர்'—என்று பட்டம் கொடுத்து பெரியார் பேசிய செய்தியை முதற் பக்கத்தில் வெளியிட்ட அதே (3—7—59—வெள்ளிக்கிழமை) விடுதலையில் வெளியான 'பெரியாரின் பொன்மொழி'யை பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறோம்:

"ஏராளமான அவதாரங்கள், தெய்வீகர்கள், சுவாமிகள். ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், நாயன்மார்கள் தோன்றியும் இந்தப் பிறவி இழிவு நீங்குவதற்காகப் பாடு பட்டதாகத் தெரியவில்லை....!"

களவாட...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

தான்! இந்தி பேசுபவனை எஜமானுக்க் கருத வேண்டிய இழி நிலையுள்ள பூமிதான்! விந்திய மலை தாண்டி வருபவர்களின் பாதம் கழுவி, பக்கமிருந்து, பணிவிடை செய்யும் அடிமைகள் வாழும் மண்தான்! அந்த 'எட்டு முழ'க் கோவண வேட்டிக்காரன் நீட்டிய பக்கத்தில் பாய வேண்டிய வேட்டை நாய்கள் வாழும்கூண்டு தான்! எடுபிடிகள் முடங்கிக் கிடக்கும் கொட்டில்தான்!

—ஆனாலும் இந்தத் திருடர்களின் செயல் அவர்களின் எண்ணத்தைப் போல அநியாய 'அரசியல்' சட்டத்தால் அனுமதிக்கப் படவில்லை.

அடிமைப்பட்ட நாட்டில் திருடுவது தவறு-என்றுதான் சட்டம் கூறித் தொலைத்து விட்டது! அந்தோ! நம் 'கொள்ளைக்கார வட நாட்டு எஜமானர்'களில் சிலர் கைதாகி விட்டார்கள்!

அவர்களுக்குத் தெரியவில்லை. தெற்குப் பகுதியில் திருட வேண்டுமென்றால் — கொள்ளையடிக்க வேண்டுமென்றால் கன்னக்கோலும், கத்திரியும், தேவையில்லை என்பது!

அரசாங்க ஆதரவுடன், எத்தனையோ தொழில்களில் இங்கு கொடி போடலாம்; கொள்ளை இலாபம் சம்பாதிக்கலாம்! குதூகல வாழ்க்கை நடத்தலாம்—என்பதை அவர்கள் அறியவில்லை, பாவம்!

கோயங்கா, டால்மியா, சாகு ஜெயின்—போன்றவர்களை அவர்கள் மறந்து விட்டார்கள்!—அல்லது பீற்றல் துணியுடன் ஊருக்குள் வந்து, இன்று பீதாம்பரம் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் 'சேட்டுகளை' அவர்கள் மறந்து விட்டார்கள்! இந்தி தெரிந்த ஒரு காரணத்துக்காக ஆபீஸர்களாக மாறிடும் கதை அவர்களுக்குத் தெரியவில்லை.

தெரியாத்தனமாக, வீட்டுப் பூட்டை உடைத்து விட்டார்கள்! இந்த நாட்டின் செல்வக் கருவூலத்தின் பூட்டுக்குரிய சாவி அவர்கள் கையிலே இருக்கிறது என்பதை மறந்து விட்டார்கள்!

இவர்களில் சிலரைக் கைது செய்திருக்கிறது அரசாங்கம்! வீட்டில் கொள்ளையடித்தவர்களின் கையிலே விலங்கு மாட்டியிருக்கிறது அரசாங்கம்! இங்கிருந்த செல்வத்தை, வடக்கே கொண்டுபோய் குவித்த கொள்ளைக்கார கும்பலைக் காராக்கிருகத்திற்குள் தள்ளியிருக்கிறது அரசாங்கம்!

ஆனால்....இந்தத் தாய் நாட்டைக் கொள்ளையடிப்பவர்களைக் கைது செய்யும் அரசாங்கம் இருக்கிறதா?—

பத்திரிக்கைத் தொழிலினால் பங்களா கட்டி, இப்போது 700 குடும்பங்களின் வயிற்றில் அடிக்கும் 'வேற்று நாட்டானின்' கொட்டத்தை அடக்கும் உறுதி கொண்ட அரசாங்கம் இருக்கிறதா?

இங்கிருப்போரின் இரத்தத்தை மாற்றி இரத்தினங்களாக்கி, வடக்கேயுள்ள தங்கள் ஊர்களில் சேமித்து வைக்கும் கும்பலைக் காராக்கிருகத்திற்குள் தள்ளத் துணிவுள்ள அரசாங்கம் இருக்கிறதா?

வடக்கே போகிறவர்களின் மடியைப் பரிசோதிக்கும் இதய வலிமை படைத்த அரசாங்கம் இருக்கிறதா?....

இல்லையென்றால் ஏன் இல்லை?

நூலேணி

காதல் காவியம்

புதுவை வாணன்

நாடகத்திற்கு வருபவர்களை—மூன்று மணி நேரத்தைக் கொட்டகைக்குள் செலவழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு வருபவர்களை ஏமாற்றாமல் அவர்கள் உள்ளத்தை நிறைவு செய்பவனே நல்ல நாடகாசிரியன்.

நல்ல நாடகாசிரியன் ஆவதற்குப் பலபல படிக்கட்டுகள் உள்ளன. அவற்றில் நடக்கத் துவங்கியிருக்கிறார், "காதல் காவியம்" எனும் நாடகத்தின் ஆசிரியர், புதுவை—வாணன்.

கதையில் ஓட்டமிருப்பினும் அதில் புதுமையில்லை; சொற்கள் சரமாரியாக வந்தாலும், அதில் ஆழமில்லை. காட்சியமைப்புகள், பாத்திர உருவகங்கள் நன்றாகவே இருக்கின்றன எனத் துணிந்து சொல்ல முடியவில்லை. இருந்தாலும் முதல் முயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும்.

[கிடைக்குமிடம் : கண்ணம்மாள் பதிப்பகம்; திருப்பாப் புலியூர். விலை : 50 காசுகள். பக்கங்கள்: 60.]

★

காதல் நெஞ்சம்

மாவண்ணா தேவராசன்

'நல்ல' குறுந்தொகை எனப் புலவரால் பாராட்டப்படும் சங்க காலத்து நூலை அடிப்படையாக வைத்துக் கடித ரூபத்தில் எழுதிய நல்ல, புதிய, முயற்சி இது.

இப்புதிய முயற்சியை நாம் பாராட்டத்தான் வேண்டுமென்றாலும் முதற் பக்கங்களில் அதிகமான அடிக்குறிப்புக்கள் இருக்கின்றன. ஆகவே, படிப்பதற்குரிய ஆர்வம் குறைக்கப்பட்டுகிறது.

'பொய்கையூரன்' — எனும் சொல்லை தும்பிசேர்க்கீரன் எனும் புலவர் பயன்படுத்திருக்கும் முறையை—நயத்தை ஆசிரியர் விளக்குவது சுவையாக இருக்கிறது. எனினும் குறிப்பு விளக்கங்கள் அதிகமாயும், அவசியமற்றும் சில இடங்கள் இருப்பதைக் காணலாம்.

[கிடைக்குமிடம்: குமரய்யன் பதிப்பகம், 8, துளசிங்கம் சந்து. சென்னை—1. விலை : ரூபாய் 2. பக்கங்கள்: 148.]

முகவரி மாற்றம்

★

திருச்சி மாவட்டக் கழக சம்பந்தமான கடிதப் போக்குவரத்துத் தொடர்புகள் கொள்ள விரும்பும் தோழர்கள் இனி அடியில் கண்ட முகவரிக்கு எழுத வேண்டுகிறேன்.

அன்பில் தருமலிங்கம்,
(தி. மு. க. மாவட்டச் செயலாளர்)
அன்பில் பி. ஒ.,
(வழி) லால்குடி.

புரட்சி நடிகர் நலம் பெறுகிறார்!

இடையறாத கலையுலக ஈடுபாட்டால் தொல்லைகள் பலவற்றைத் திடீரெனச் சந்திக்கிறார்கள், எத்தனையோ கலைஞர்கள்! படப்பிடிப்பின்போது உயிருக்கே ஆபத்து நேரும் இக்கட்டிலிருந்து தப்பிய பல நிகழ்ச்சிகளையும் நாம் படித்திருக்கிறோம். இருந்தாலும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு நாடக நடுவிலே கால் முறிபட்டது என்ற செய்தி கிடைத்தபோதோ தென்

னகமே திடுக்கிட்டது! இதற்கு அவரது கலையுலக முன்னேற்றம் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது; மக்களின் நெஞ்சத்திலே அவர் பெற்றிருக்கிற தூய்மையான நல்ல இடம் தான் முக்கிய காரணமாகும்!

ஆகவேதான் அந்த நடக்கக்கூடாத நிகழ்ச்சியைப் பேரிடியாகக் கருதினர், மக்கள்! 'விரைவில் குணமடைய வேண்டும்; மீண்டும் கலையுலகப் பணியிலே ஈடுபடவேண்டும்' என்று பாசத்துடன் வாழ்த்திய இதயங்கள் மிக ஏராளமாகும்! எண்ணத் தொலையா பல ஜோடிக் கண்கள் அவரது உடல் நலத்தைத் துடிப்புடனும் ஆர்வத்துடனும் கவனித்துக் கொண்டிருந்தன. நல்லவர்களின் நெஞ்சத்து ஆசை வீண் போகவில்லை; புரட்சி நடிகர் இப்போது நலம் பெற்று வருகிறார் என்ற செய்தி நாட்டுக்குக் கிடைக்கிறது.

உடைபட்ட எலும்பு ஒன்று சேர்ந்துவிட்டது; முன்பிருந்ததை விட அதிக பலம் இனி கிடைக்கும். என்கிறார் மருத்துவர்!

ஆகவே, மருத்துவ மனையிலிருந்து தனது இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டுவிட்டார் அவர். அதிகமாகப்போனால் இன்னும் ஒரு மாதம்தானாம்! பிறகு பழைய பொலிவுடன் செயலாற்றத் தொடங்கிவிடுவார்—என்ற செய்தி நம்முடைய செவிகளில் தேனாகப் பாய்கிறது.

ஆகஸ்டில் வருகிறது 'பொன்விளையும் பூமி'

மறுமலர்ச்சி எழுத்தாளரும், இப்பக்கத் தோழருமான சகோதரர் இராம. அரங்கண்ணலால் எழுதப்பட்ட திரைப்படமான "பொன்விளையும் பூமி" ஆகஸ்டில் நிச்சயம் திரையிடப்பட்டு விடுமாம். திருப்பதி அருகே சமீபத்தில் வெளிப்புறக் காட்சிகள் சிலவற்றைப் படமாக்கினர், டைரக்டர் ஏ. பீம்சிங். அந்தக் காட்சிகளோடு படம் முழுதும் முடிந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இதில் ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி, டி. எஸ். பாலையா, சந்திரபாபு, எஸ். வி. சுப்பையா, ராமராவ்—முதலியோர் நடித்திருப்பது தெரிந்ததே!

இந்தி மொழியில் 'நாடோடி மன்னன்'

'மன்னன் என்பவன் யார்?' என்பதை உணர்த்தி, 'வெற்றிப் படமென்பது என்ன?' என்ற வினாவுக்கும் சரியான விடை சொல்லிய எம். ஜி. ஆர். பிக்சர்சின் 'நாடோடி மன்னன்' இப்போது இந்தி மொழியில் தயாரிக்கப்படும் என்கிற செய்தி கிடைத்திருக்கிறது. படத்தின் சில பகுதிகளை மீண்டும் படமாக்கப் போகிறார்களாம், அதன் வேற்று மொழி உரிமையைப் பெற்றிருக்கிற குமார் மூவீஸ் என்ற புதிய நிறுவனத்தார்.

வடநாட்டின் பிரபல இசையமைப்பு இரட்டையர்களான சங்கர்—ஜெய்கிஷனோ, அல்லது பர்மனோ இசைப் பணிக்கு ஒப்பந்தம் செய்யப்படுவார்கள். இன்னும் மூன்று திங்களுக்குள் இப்படம் வடக்கே வெற்றி நடைபோடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

சண்முகம் - சகுந்தலா

✻

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் இளவலும், சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பியவருமான திரு. வி. சி. சண்முகம் அவர்களுக்கும், தோழியர் சகுந்தலா அம்மையாருக்கும் சென்ற 17-6-59 அன்று சென்னையில் மிகச் சீருடன் திருமணம் நடைபெற்றது. இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் விழாவுக்குப் பெரும் சிறப்பைச் சேர்த்தன. அமைச்சர்களும், பட உலக பிரமுகர்களும், நண்பர்களும் பெருவாரியாகத் திரண்டு சிறப்பித்தனர். சென்னை நகரத்து மேயர் அரசு, நாவலர் நெடுஞ்செழியன், தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், செழியன்—ஆகியோரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

புதுவாழ்வு துவங்குகின்ற மணமக்கள், வாழ்வில் மேலும்பல வெற்றிகள் காண நாமும் வாழ்த்துகிறோம்.

விஜயாவில் வளரும் மூன்று படங்கள்

வாகினி அதிபரான நாகிரெட்டியார், இப்போது மூன்று படங்களுக்கான பூர்வாங்க வேலைகளை முடித்துவிட்டார். மூன்று படங்களும் வழக்கம் போல் தமிழ்—தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கப்படும்.

அவற்றில் ஒரு படம் பிரபல வங்காளக் கதையான 'சாகரிகா' வைத் தழுவியதாக இருக்கும்; அதை டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்கிறார். மற்ற இரண்டு படங்களையும் பிரசாத், கே. வி. ரெட்டி—இருவரும் தனித்தனியாக டைரக்ட் செய்கின்றனர். அந்த இரண்டில் ஒன்று குழந்தைகளுக்கான படமாக இருக்குமாம்!

மாணிக்கம் - சுலோசனா

சென்ற 25-6-59 அன்று சென்னையில் மற்றுமொரு பிரபல திருமணம் நடைபெற்றது. ஜுபிடர் அதிபரான திரு. எம். சோமசுந்தரம் அவர்களின் புதல்வியார் சுலோச்சனா பி.ஏ. அவர்களுக்கும், திருப்பூர் முத்துசாமி அவர்களின் செல்வர் மாணிக்கம் பி. ஏ. அவர்களுக்கும் சிறப்புடன் திருமணம் நடைபெற்றது. படத்தொழில் துறையினரும், நடிக நடிகையரும் வந்திருந்து, பரிசுகள் வழங்கி வாழ்த்தினர். அண்ணா அவர்களுடன் மணமக்கள் எடுத்துக்கொண்ட படத்தை மேலே காணலாம்.

செத்தும் கொடுத்தார்!

இதுவரை பட உலக வரலாற்றிலேயே அதிக பணம் ஈட்டியிருக்கின்ற திரைப்படம் 'பத்து கட்டளை'களாகத்தான் இருக்கவேண்டும்-என்று ஹாலிவூட் திரையுலகச் செய்திகள் கூறுகின்றன.

இதுவரையில் உலகம் முழுவதிலும் கிட்டத்தட்ட ஏழு கோடி பேர் அந்தப் படத்தைப் பார்த்திருக்கின்றனர்! ஏறத்தாழ 8 கோடி டாலர் அதற்கு வசூலாகியிருக்கிறது!

இதைவிட மிகச் சுவையான செய்தி ஒன்றும் கிடைத்திருக்கிறது. அந்தப் படத்தைத் தயாரித்த சிசில் பி. டெமில் அதன் வருவாயிலிருந்து சிறு தொகையும் தனக்கென்று எடுத்துக் கொள்ளவில்லையாம். அவரது பங்குக்காக வரக்கூடிய தொகையையும் கல்வி, மற்றும் அறப்பணிக்குச் செலவிட ஒரு அற நிலையத்திற்கு ஒதுக்கிவிட்டாராம், அவர்!

இந்தச் செய்தியை பாரமவுண்ட் திரைப்பட நிறுவனத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

முதல் தயாரிப்பு

புதுத் திரைப்பட நிறுவனமாம் வெங்கடேஷ் பிலிம்ஸ் தன் கன்னித் தயாரிப்பிற்கான கதைத் தேர்வை இதுகாறும் நடத்திக்கொண்டிருந்தது. இப்போது கதைத் தேர்வு முடிந்து, திரைக் கதை. வசனத்தை கே. ஜி. இராதாமணாளன் எழுதுவார் என்ற அறிவிப்பும் வெளிவந்திருக்கிறது. டைரக்டர் ஆர். பத்தா என்பவர் இத் திரைப்படத்தை 'டைரக்ட்' செய்வார் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சுழல் விளக்கு

மாலூரி

மா. தட்சிணாமூர்த்தி;
திருநெல்லிக்காவல்.

(?) "சென்னை நகரசபையை தி. மு. கழகம் கைப்பற்றியதற்குக் காரணம், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லோரும் அதற்கு ஓட்டுப் போட்டதால் தான்!" என்கிறாரே ராசாராம் நாயுடு; அப்படியானால் காங்கிரசிற்கு ஓட்டுப் போட்டவர்கள் யார்?

1,48,660 பேர் சென்னை நகரில் மட்டும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் என்பதை வாதத்திற்காகவே ஒப்புக்கொண்டால் அவர்கள் காய்ச்சுகிற சாராயத்தைக் குடிக்க எத்தனை இலட்சம் பேர் இருக்க வேண்டும்? அவர்களில் சிலர் 'போதை'யில் காங்கிரசிற்கு ஓட்டுப் போட்டிருக்கலாம்!

கே. கோபால்; ஆயிரம்விளக்கு

(?) பண்டித நேரு திருப்பதிக்கு வருகிறாராமே; ஏன்?

ஆண்டவனுக்கு அஞ்சாத அவர், நிச்சயம் தன் பேரக் குழந்தைகளுக்கு மொட்டையடிக்க வரமாட்டார்! கொடுக்கச் சக்தியுள்ள உலக நாடுகளிடம் எல்லாம் கடன் வாங்கியாகிவிட்டது; இனிக் கொடுப்பாரில்லை! ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இந்தியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவரான வெங்கடாஜலபதியிடம் கடன் கேட்க வருகிறாரோ; என்னவோ!

பி. ரங்கசாமி; சாத்தூர்.

(?) காமராஜர் இப்போது ஏன் சூறாவளிச் சுற்றுப் பயணத்தைத் துவக்கியுள்ளார்?

இன்னும் இரண்டு ஆண்டுகள் தானே இருக்கின்றன, தேர்தலுக்கு? ஆங்காங்கு சென்று தயார்படுத்தி வருகிறார், தம் தேர்தல் பட்டாளத்தை! பதவிப் பேராசை என்ன அவ்வளவு சீக்கிரம் புளித்துவிடுமா?

சி. ஏழுமலைசாமி; குன்னூர்.

(?) ஊட்டியில், நேரு தலைமையில் நடந்த திட்ட விவாத அரங்கில் கலந்துகொண்ட சுப்பிரமணியம் என்ன பேசியிருப்பார்? அவர் அருகிலிருந்த காமராசர் என்ன நினைத்திருப்பார்?

"தேபர் சொன்னது சரி! இந்திரா காந்தி சொன்னது மிகச் சரி! நேரு அவர்கள் சொன்னது கேட்கவே வேண்டாம்.... மிகமிகச் சரி!"—என்று சுப்பிரமணியனார் எல்லாவற்றிற்கும் வழி மொழிந்து ஆங்கிலத்தில் பேசியிருப்பார்! காமராசரோ, "என்ன இவர்கள் 'வழவழா' என்று பேசிக்கொண்டு! ஒருத்தர் பேசுவது இன்னொருத்தருக்குப் புரியவில்லை! இதிலென்ன திட்டம் வேண்டிக் கிடக்கிறது? திட்டமில்லாமலேயே நான் நடத்தவில்லையா என் நிர்வாகத்தை?" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்திருப்பார்!

எஸ், லோகநாதன்; குறிச்சி.

(?) நேபாள நாட்டிற்குச் சென்று வந்த நேரு எதைக் கொண்டு வந்தார்?

* ஒரு கறுப்புத் தொப்பி,
* ஒரு மூட்டை மலர் மாலை,
* வழிச்செலவுப் பட்டியல்,
* அந்த நாடு இந்த 'ஏழை நாட்டை'க் கேட்டிருந்த உதவிகள்!

பி. மலையான்; சென்னை 1.

(?) பொன்னாடை போர்த்திக் கொள்வது ஆடம்பரமல்ல; தோலுக்கு நல்லது அது!"—என்று ஒரு மடாதிபதி கூறியதை பற்றித் தங்கள் கருத்து என்ன?

"பொன்னாடை போர்த்திக்கொள்வது நல்லது என்பதை எங்கள் வளர்ந்து 'கிடக்கும்' உடலைப் பார்த்தாலே புரியவில்லையா? தெப்பமென நெய் மிதக்கும் சாப்பாட்டை உண்பது இரைப்பைக்கும் குடலுக்கும் நல்லது என்பதை எங்கள் வயிற்றைப் பார்த்தாலே தெரியுமே! நவரத்தினங்கள் வைத்திழைக்கப்பட்ட தங்கப் பல்லக்கில் சவாரி செய்வது கால்களுக்கு நல்லது என்பதை எங்கள் வீங்கிக் கிடக்கும் கால்கள் கூறவில்லையா?"—என்று மடாதிபதிகள் உபதேசம் செய்யும் காலத்தையும் எதிர்பார்ப்போமாக!

சி. சாரதி; தங்கசாலை.

(?) 'நான்சென்ஸ்' — எனக் கூறிய நேருவின் படத்தை மு. கருணாநிதி திறந்து வைக்கலாமா?—என்று ஒரு 'பெரியவ'ரின் தினத்தாள் கேட்டிருக்கிறதாமே!

ஒரு செயலைப் பற்றி விமர்சனம் வழங்க வேண்டுமென்றால் அது நடந்த சூழ்நிலை, காலம், செயலைச் செய்தவரின் விளக்கம் இவைகளை 'சரிவர' அறிந்துகொண்டு பேசுவதுதான் அறிவுடைமை! பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் நேருவின் படத்தைத் திறந்துவைத்து, "நேருவின் படத்தை திறந்தது பற்றி பலர் ஆச்சரியப்படலாம். ஆனால் அந்தக் காலத்தில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீரரும், மிதவாதிகள் நிரம்பிய காங்கிரசில் பகுத்தறிவையும் சோஷலிசத்தையும் புகுத்த நினைத்தவரும், பல அறிவேடுகளின் ஆசிரியரும், தியாகங்கள் பல புரிந்துகொண்டிருந்தவருமாகிய நேருவின் படமே இங்கு திறக்கப்பட்டதாக நீங்கள் கொள்ள வேண்டும்!"—என்று பேசப்பட்ட பேச்சை மறந்தது ஏன்? செய்தியை மறைத்து, திரித்து மாசு கற்பிப்பதுதான் பெரியவரின் செயலா?

கே. பி. பழனிசாமி, திண்டுக்கல்.

(?) முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் மாதவமேனன் கேரளாவில் கைது செய்யப்பட்டாராமே!

அதைக் கேட்டதிலிருந்து நம் அமைச்சர்களுக்குக் காலும் ஓடுவதில்லை; கையும் ஓடுவதில்லை! வாய் உலர்ந்து கண்கள் நட்டுக்கொள்ளுகின்றனவாம். காரணம், கேரளாவைப்போல் எதிர்க்கட்சி (தி. மு. க.) ஆட்சி இம் மாநிலத்தில் வரத்தான் செய்யும்; நம் 'பாவச் செயல்களுக்கு'த் தண்டனை கிடைக்கத்தான் செய்யும் என்ற எண்ணமோ என்னவோ?

டி. பாண்டியன்; விளாத்திகுளம்.

(?) டில்லி மந்திரிகளில் எஸ். கே. டேயுக்கு தென்னாடு என்றால் பரிவு உண்டாமே?

வாலை ஆட்டி, முன்னங் கால்களை ஊன்றிப்படுத்து 'வணக்கம்' செய்யும் நாயிடம் நமக்கு சில நேரங்களில் பிறக்கும் பரிவைப் போன்றதே அது!

மி. நீலகண்டன்; பழனி.

(?) சினிமா தியேட்டரில் 'பாரதிய சமாச்சார சித்ரா' எனும் செய்திப் படம் காட்டுவதன் நோக்கம் என்ன?

இந்தியாவின் 'ஏகாதிபத்ய நடிகர்' நேரு அவர்களைத் 'தரிசி'க்க வைப்பதும், இந்திரா காந்தி போன்ற புதுமுகங்களை அறிமுகப்படுத்துவதுமே அந்த 'பாரதீய' சமாச்சார சித்ராவின் நோக்கம்!

மு. கருணாநிதி
ஜூலை மாத
வெளியூர் நிகழ்ச்சிகள்

★

10	பகல்—சிதம்பரம் செயற்குழு மாலை—வையூர் கூட்டம்
11 12	மாயூரம் பொதுக்குழு நாடகம்
13	மாலை—தஞ்சை சிறப்புக் கூட்டம்
14	தச்சன்குறிச்சி
15	பிற்பகல்—கரூரில் கவர்னர் சந்திப்பு மாலை—குளித்தலை கூட்டம்
19	காரைக்குடி குறள் விழா
20	சின்னமனூர் [நாடகத் தலைமை]

பார்-பார்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நிறை பார்த்து; தனது ஆதரவு யாருக்கென்பதைத் திட்டவட்டமாக நிலை நிறுத்தியிருக்கிறது.

அது தவிர; இன்னும் சில மாதங்களில்—அதாவது வருகிற செப்டம்பருக்குள் — அங்கே பஞ்சாயத்துகளுக்கும் நகரசபைகளுக்கும் தேர்தல் நடைபெற இருக்கிறது.

காந்திய சீடர்கள் கொஞ்சம் பொறுத்திருந்தால் மக்கள் மன்றம் வழங்கக்கூடிய தீர்ப்பை இரத்தம் சிந்தாமலேயே தெரிந்துகொள்ள முடியும்!

—அதைவிட்டு போராட்டம் நடத்தி கேரளத்தை ரத்தக் களரியாக்குவது ஜனநாயக நங்கையைக் கற்பழிப்பதுபோல் இருக்கிறது.

முன்பெல்லாம் அரிவாளிலே மட்டும் நம்பிக்கை வைத்து; வேட்டு முறையிலே நாட்டம் கொண்டிருந்தவர்கள். அவர்கள்! இப்போதுதான் அவர்கள் செங்கதிர் காணுவதற்கு ஓட்டுமுறையே சிறந்தது எனத் தேர்ந்தெடுத்து கேரளத்தை உதாரணமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

—இன்று கேரளத்திலே கதர்ச் சட்டைக்காரர்கள் நடத்துகின்ற குழப்பம் அவர்களைத் திரும்பவும் வேட்டு முறைக்கு அழைத்துச் சென்று விடக்கூடாது—என்பதுதான் முற்போக்காளரது ஆசையாக இருந்து வருகிறது!

அதே நேரம்; உட் குழப்பம்! அதனால் மறுதேர்தல் என்கிற பண்டிதர் வாக்கு ஒரு தற்கொலைப் போக்குமட்டுமல்ல; அது இந்திய உபகண்டத்திலுள்ள எல்லா எதிர்க் கட்சிக்காரர்களையும் பார்த்து, "எதிர்க் கட்சி நண்பர்களே! உங்கள் மாநிலத்திலே நடைபெறும் காங்கிரஸ் ஆட்சி உங்களுக்குப் பிடிக்காவிட்டால் சற்றும் தயங்காதீர்கள்! உடனே மறியல்; போராட்டம்—போன்ற இன்ன பிற செயல்களைத் துவங்குங்கள்! மறுதேர்தல் தானாகவே நடைபெறும்!"—என்று பகிரங்கமாக அறிவுறுத்துவது போலவும் இருக்கிறது!

மற்றவர்கள் இந்தச் சவாலை இதர மாநிலங்களில் எப்போது ஏற்றுப் பதில் சொல்லப்போகிறார்கள்—என்பது நாளை கேரளத்தில் டெல்லி என்ன செய்யப் போகிறது—என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

நன்றி

கோனார் தமிழ் உரை நூல்

(எஸ். எஸ். எல். ஸி. 1960)

பதிப்பித்த பிரதிகள் அனைத்தும் பத்தே நாட்களில் விற்பனையாகக் காரணமாயிருந்த ஆதரவாள மாணவர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி.

இதுவரை உரைநூல் கிடைக்கப்பெறாத மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மறுபதிப்பு மீண்டும் அச்சாகிறது. ஒரு வாரத்தில் மீண்டும் பிரதிகள் கிடைக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பழனியப்பா பிரதர்ஸ்.

பூரண விற்பனை உரிமையாளர்கள்:
கார்த்திகேயன் அண்டு கம்பெனி,
சென்னை-5.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழநாடு